Registered as a Newspaper

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்

இளவரசி

S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ2/-

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்

இளவரசி

S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

மலர்:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆடி மீ 23 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 12 (08-08 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-2௨

# வடக்கு கிழக்கு --> இடைக்கால நிர்வாகத்தில்

# போராளிகளும் கூட்டணியும்

## இந்திய அரசின் முயற்சி கைகூடும் கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஆக. 8

மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறும் வரை வடக்கு, கிழக்கில் அமைக்கப்படும் இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் போராளிகள் இயக்கங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் பங்குபற்றச் செய்யும் முயற்சியில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அந்த முயற்சி அனேகமாகக் கைகூடும் கட்டத்தில் இருப்பதாக சஞ்சிவிக்கு மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தப்படி மாகாண சபைகளுக்கு தேர்தல் நடக்கும் வரை வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது

அந்த இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் போராளிகள் இயக்கங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் பங்கு பற்றச் செய்ய இந்தியா முயற்சிகள்மேற்கொண்டு வருகிறது.

இங்கு நிலைகொண்டு உள்ள இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மூலம் இந்த முயற்சிக்கு போராளிகள் அமைப்புகளின் ஆதரவு திரட்டப்பட்டுவருகிறது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும் இங்கு நடந்துள்ளன.

இடைக்கால நிர்வாகத்தில் தாம் நேரடியாகக் கலந்து கொள்ளாமல் தமது ஆதரவாளர்களை நியமிக்க போராளிகள்இயக்கங்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அறிய வருகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமையஇருக்கும்இடைக்கால அரசில் போராளிகளும் பங்கு ஏற்பார்கள் என்பதில் இந்திய அரசுக்கு நம்பிக்கை இருப்பதாக இணை அமைச்சர் திரு நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று மாநில அவைகளின் கூட்டத்தில் பேசும்போதே திரு நட்வர்சிங் இதனைத் தெரிவித்தார். (அ-ஒ)

## புலிகளின் முகாமில் இந்திய துருப்புகள்

யாழ்ப்பாணம், ஆக. 8

விடுதலைப் புலிகளின் தலைமையலுவலகத்தில் இந்திய துருப்புகள் நிலை கொண்டுள்ளன.

நேற்று மாலை அங்கு வந்த இந்தியத் துருப்புகள் தலைமையலுவலகத்தின் மேல்மாடியில் நிலை கொண்டனர்.

ஏனைய இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி வசதிகளும் அங்கு இணைக்கப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுக்கான சகல வசதிகளையும் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். (உ-10)

## திருமலையிலும் ஊரடங்கு

கொழும்பு, ஆக.8

திருகோணமலை மாவட்டம் உட்பட பொலன்னறுவ, அம்பாந்தோட்டை, மொனறுகல மாவட்டங்களில் இன்று சனி மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருகின்றது.

கதிர்காமப் பிரதேசத்தில் இரவு 10-30மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருகிறது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் இரவு 9 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்படும். (உ-எ)

## யாழ் மாவட்டத்தில் சனிக்கிழமைகளிலும் இனி பாடசாலை

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மூன்றாந் தவணை முழுவதும், சனிக்கிழமைகளிலும் பாடசாலைகள்நடைபெறும்.

- இவ்வாறு யாழ் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தெரிவித்தார்.

ஒரு தவணையில் குறைந்தது 55 நாட்களாவது பாடசாலை நடைபெற வேண்டும். ஆனால் நடைபெற்ற இரண்டு தவணைகளிலும் மொத்தமாக சுமார் 70 நாட்களே பாடசாலை நடைபெற்றுள்ளது.

இதன் காரணமாகவே சனிக்கிழமைகளிலும் பாடசாலை நடத்தமுடிவு செய்யப்பட்டது.

ஜி.சி.ஈ. உயர் தரப் பரீட்சை நடைபெறாத பாடசாலைகளை மூன்றாந் தவணைக்காக விரைவில் திறப்பது பற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (உ-7)

## ராஜீவ், ஜே. ஆருக்கு நோபல் பரிசு வழங்க கோரிக்கை!

வாஷிங்டன், ஆக. 8

பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் கூட்டாக நோபல் சமாதானப் பரிசை வழங்கும்படி அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் நோபல் பரிசு நிறுவனத்தைக் கேட்டுள்ளனர்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்காக இப்பரிசு இவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று அக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்க உதவி அமைச்சர் ரொபர்ட் பிக் கருத்து வெளியிடுகையில்—

''ஜெயவர்த்தனவின் துணிச்சலும் காந்தியின் அரசியல் விவேகமுமே ஒப்பந்தத்தை உருவாக்கின'' — என்று சொன்னார். (உ-எ)

## திருமலையில் இளைஞர்கொலை

யாழ்ப்பாணம், ஆக. 8

நேற்றுக்காலை திருகோணமலை நகர்ப் பகுதியில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக இந்திய இராணுவத்தினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (உ-10)



ஸ்ரீலங்கா இராணுவ கெடுபிடிகளை கண்டித்து

## நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 8

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி அமைதி நிலை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நாளை தமிழ்ப்பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

பல பொது அமைப்புகள், சங்கங்கள், இயக்கங்கள் ஒன்றிணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அறைகூவல் விடுத்திருக்கின்றன.

இந்த ஹர்த்தாலுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி பொதுமக்கள், வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்கள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்குழு, ஈரோஸ் இயக்கம், ஈழவர் முன்னணி உட்பட பல அமைப்புகள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றன. (உ)

## பளையில் இந்திய படையினர்

பச்சிலைப்பள்ளி, ஆக. 8

பளைப்பகுதியில் முகாம் அமைக்கும் பொருட்டு நூற்றுக்கும் அதிகமான இந்திய அமைதிகாக்கும் படையினர் நேற்று முன் தினம் நான்கு கவச வண்டிகளிலும் மூன்று ஜீப்புகளிலும் வந்துள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக உலாந்தா தோட்டத்தில் தங்கியிருப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (உ-ரி)

## சட்டமூலம் தயாராகுகின்றது

கொழும்பு, ஆக. 8

இந்திய—இலங்கை ஒப்பந்தத்துக்கு சட்ட வடிவம் கொடுக்கும் வேலையில் சட்டம் அதிபர் திணைக்களம் ஈடுபட்டிருக்கின்றது.

சட்டமூலம் பின்னர் அமைச்சரவை, அரச நாடாளுமன்றக் குழு, நாடாளுமன்றம் ஆகியவற்றில் சமர்ப்பிக்கப்படும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## நயினாதீவு சோதனை இன்று முதல் இல்லை!

### கப்டன் சமரசேகரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 8

நயினாதீவிற்கும் அதனை அண்டியுள்ள தீவுப் பகுதிகளுக்கும் செல்வோர் இனிமேல் படையினரின் சோதனைக்காக நயினாதீவு இறங்கு துறைக்கு செல்லத் தேவையில்லை.

—இவ்வாறு நயினாதீவு முகாமின் கப்டன் மோகன் சமரசேகரா யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி ரி. குலசேகரத்துக்கு நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பயணிகள் மீது நயினாதீவில் படையினர் தாக்குதல் நடத்தியதை மேற்படி சப்டனின் கவனத்துக்கு பொதுசனத் தொடர்பு அதிகாரி கொண்டுவந்தார். அப்போதே சோதனைக்காக இனிமேல் இறங்குதுறைக்கு பயணிகள் செல்லத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவுக்குச் செல்லும் பயணிகள் படகின் மூலம் கோயிலடியில் போய் இறங்கலாம்.

ஊர்காவற்றுறை இறங்குதுறையை மறு அறிவித்தல்வரை பொது மக்கள் பாவிக்க வேண்டாம் என்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி கேட்டுக்கொண்டார். (உ-7)

## நிவாரணப் பொருள் விநியோகம்

கோப்பாய், ஆக. 8

பத்தமேனியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கான நிவாரணம் இன்றும் நாளையும் ஆவரங்கால் ப. நோ. கூ. சங்கத்தில் வைத்து வழங்கப்படும்.

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பகுதி வீடுகளில் தங்கியிருப்பவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கோப்பாய்ச் சந்தி ப.நோ.கூ. சங்கத்தில் நிவாரணம் பெறலாம். (உ-7-ரி)

### கருத்துக் கலசம்

## சமாதானம்

தர்மம் தலைகாக்கும் என்பது முதுமொழி. ஆனால் இன்றைய உலகில் சமாதானம் உயிர் காக்கும் என்று புதுமொழி கூறவேண்டியுள்ளது.

அந்த அளவுக்கு உலகில் சண்டை சச்சரவுகள் அதிகரித்துள்ளன. அமைதி இன்மை சமாதானத்தின் எதிரி. ஆனால் உலகின் எந்த மூலையை எடுத்தாலும் ஏதோ ஒரு விதத்தில் அமைதி இன்மை நிலவவே செய்கிறது.

அமைதி இன்மைக்குப் பல காரணங்கள் மூலமாக உள்ளன. இனச் சண்டை, மதச் சண்டை, குலச் சண்டை, நிலச் சண்டை, சொத்துச் சண்டை, உரிமைகளுக்கான சண்டை, ஆட்சி அதிகாரச் சண்டை என்று பல வகையான சண்டைகள், சச்சரவுகள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து நடக்கின்றன.

நாட்டுக்கு நாடு மட்டும் தான் சண்டை சச்சரவுகள் நடக்கின்றன என்பதல்ல. வீட்டுக்கு வீடும் சச்சரவுகள் நிறைந்திருக்கின்றன. அண்ணன் தம்பி சண்டை, தந்தை தனயன் மாறுபாடு, கணவன் மனைவி கருத்து வேற்றுமை என்று எங்கும் மக்கள் பிளவுபட்டு நிற்கின்றனர். அதனால் வீட்டிலும், சமூகத்திலும், நாட்டிலும், உலகத்திலும் அமைதி இன்மை உண்டாகிறது.

அவ்வாறான அமைதி இன்மை நிலைகளால் எல்லா இடங்களிலுமே சமாதானம் அற்றுப் போகிறது.

சமாதானம் இல்லையேல் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது. உலகமும் அதில் வாழும் மக்களும் தொடர்ந்து நிம்மதியாக வாழ்வதற்கு சமாதான சகவாழ்வு அத்தியாவசியம்.

சமாதானம் இல்லாவிட்டால் பகைமை உணர்வு ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பது அர்த்தம். பகைமை எப்போதும் அழிவைத் தருவது.

பகைமையை அழிப்பதற்குச் சகிப்புத்தன்மை அவசியம். மற்றவர்கள் விடும் பிழைகளை மன்னிக்கும் பண்பும் தேவை. இந்த இரண்டையும் வளர்த்துக்கொள்ள மனச் செழுமை வேண்டும்.

ஆக மொத்தத்தில் பார்க்கும்போது வீட்டிலும், நாட்டிலும், உலகத்திலும் சமாதானம் நிலவ மனித சமூகத்தின் மனச் செழுமை மிக மிக அவசியம்.

### சுபநேரம்

8-8-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
03.04 முதல் 04.34 வரை
ராகுகாலம்:-
09.04 முதல் 10.34 வரை
வராஹ ஜயந்தி
பட்டினத்தடிகள்
குருபூசைத் தினம்

### செய்திச் சாரம்

## விடுதலையானோர் புறப்பட்டனர்

கொழும்பு, ஆக. 8

பூஸா முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட முதலாவது தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் இந்தியக் கப்பலிலே வடபகுதி அனுப்பிவைக்கப்பட்டனர்.

—இப்படி கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. (உ-எ)

## புலிகளின் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 8

கண்ணிவெடிகள்புதைத்து வைத்திருக்கும் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகளின் அனுமதி இல்லாமல் செல்ல வேண்டாம் என புலிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

தமது சென்றி நிலைகளில் விவரங்களை அறிந்த பின் பொதுமக்கள் அந்த இடங்களுக்குச் செல்லலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-10)

## தேசிய பாதுகாப்பு அமைச்சு கலைக்கப்படும்?

கொழும்பு, ஆக. 8

தேசிய பாதுகாப்பு அமைச்சு விரைவில் கலைக்கப்படும்.

- இப்படி 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் அத்துலத்முதலி தேசிய புனர்நிர்மாண அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## வழக்குகள் வாபஸாகும்

கொழும்பு, ஆக 8

தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட சகல வழக்குகளும் வாபஸ் வாங்கப்படும்.

கொழும்பில் அரசுப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார். (உ-எ)

## 10 தினங்களில் 141 துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு, ஆக. 8

தென்னிலங்கையில் பத்துத் தினங்களில் பதினேழு பொலீஸ் பகுதிகளில் 141 துப்பாக்கிகள் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்டன.

தடை செய்யப்பட்ட ஜே.வி.பி. இயக்கத்தவர்களே இக் கொள்ளைகளை நடத்தினர் என கொழும்புப் பொலீஸார் அறிவித்தனர். (உ-எ)

## நாளை விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 8

வயாவிளான் பிரசைகள் குழுவின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை வித்தியாலயத்தில் நடைபெறும். (உ-7)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**சேவை**

ரி.வி. வீடியோ, டெக் ஓடியோ டெக், ரேடியோ மின்சார எலக்ரோனிக் பொருள்கள் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம் ரெலிவொயிஸ் என்ஜினியேர்ஸ், 184, A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1393)

தெளிவான ஞேனியோ பிரதிகள் தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகள். தரமான போட்டோ ஸ்ரற் பிரதிகளுக்கு யாழ் நகரில் நம்பிக்கை பெற்ற நிறுவனம் கிளீன்கட், இல. 239, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (1459)

**தேவை**

பாவனையில் இல்லாத ரி.வி. வீடியோ டெக் மின்சார உபகரணங்கள் நியாயவிலைக்கு வாங்கப்படும். தொடர்பு: 184. A நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1392)

பனை ஓலைச் சார்வு தொகையாகத் தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

Kitchen Helper steward காலை 9 மணிக்கும் 10மணிக்கும் இடையில் நேரில் தங்கமைகளுக்கான பத்திரங்களுடன் வரவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ட், 168 கோயில் வீதி, நல்லூர். (1392)

தவியார் வைத்திய நிலையத்தில் வேலைசெய்வதற்கு ஓர் (R.M.P) வைத்தியர் தேவை. உடனே தொடர்புகொள்ளவும். ராஜ் டிஸ்பென்சறி, முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு. (1400)

**விற்பனைக்கு**

Learner's English லேனேர்ஸ் இங்லீஸ் தமிழ் மொழிமூலம் ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல். விலை ரூபா 16/- வரதர் வெளியீடு விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

வாழ்நாள் முழுவதும் வழிகாட்டியாக இருக்கும் உன்னதமான எண் ஜோதிட நூல் 'வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி'' தனிப் பிரதி 6/50 ''தேனிசை மழை'' ஐந்தாம் பாகம் புதிய பாடல்கள் நிறைந்தது. தனிப்பிரதி நான்கு ரூபா பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிருஷ்ணராஜா ஸ்டோர்ஸ், இணுவில், ராஜா வீடியோ அளவெட்டி, ஜோதி புத்தகசாலை மன்னார். ஆர்.வி புத்தகசாலை கோப்பாய். (1395)

நல்லூர் சுற்றாடலில் இரண்டு பரப்புக் காணியில் நவீன வசதியுடன் கூடிய புதிய பெரியவீடு உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு; நம்-15, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (1394)

**அறிவித்தல்**

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறிவிட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். தற்காலிக கிளை நிலையம் விக்ரோறியா றோட், ஆஸ்பத்திரி பின்பக்கம், யாழ்ப்பாணம். (1457)

# தமிழர் தாயகத்தின் கரிபால்டி பிரபாகரன்

- செ. கோடீஸ்வரன் -

பசும் பூத்த பழம் பெரும் நாடுகளுள் ஒன்று இத்தாலி. பழைய உரோம சாம்ராஜ்யத்தின் தொட்டிலாகவிளங்கியது அந்தநாடு.

நவீன ஐரோப்பிய சரித்திரகாலம் இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியுடன் ஆரம்பிக்கிறது. லியோனடா விண்சி போன்ற இத்தாலிய மறுமலர்ச்சித்தூதர்கள் அங்கே தோன்றினார்கள். நவீன சரித்திரத்தின் ஆரம்ப நாடாக இத்தாலி விளங்கிய போதும் அரசியல் துறையில் வீழ்ச்சியுற்றிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் பெரிய நாடான இத்தாலி - ஆஸ்திரிய - பிரஞ்சு மன்னர்களினுலும் பங்கிடப்பட்டிருந்தது. இத்தாலி நாட்டுக்கு வெளியே இருந்த சாடினியா - பீட்மன்ட் என்ற தீவின் அரசைத் தவிர இத்தாலிய பூமியின் எந்தப்பகுதியிலும் இத்தாலிய அரசு என்று ஒன்று மருந்துக்குக் கூட இருக்கவில்லை. சாடினியா - பீட்மன்ட் என்ற சிறு தீவில் மட்டுமே விக்டர் இமானுவேல் என்ற இத்தாலியன் ஒருவன் அரசனுயிருந்தான்.

இக்காலத்தில் இத்தாலியில் தோன்றிய சிந்தனையாளன் மாஜினி. தன்னுடைய உற்சாகம் மிக்க எழுத்துக்களினுல் இத்தாலிய தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினன். இத்தாலியைப் பங்குபோட்டுக்கொண்ட வேற்று மன்னர்களைக் களைத்து இத்தாலியை விடுவித்து இத்தாலிய விடுதலையையும்ஒற்றுமையையும் வலியுறுத்த எழுதி எழுதிக் குவித்தான்.

மாஜினி விதைத்த விடுதலைப்பயிர் விரைந்து வளர்ந்தது. அவன் கண்ட கனவை நனவாக்கி இத்தாலிய விடுதலையைப் பெறவாளெடுத்தான் ஒரு வீரன். அவன் தான் சரித்திரம் போற்றும் சுதந்திர வீரன் கரிபால்டி.

இத்தாலிய விடுதலையை வாள்முனையில் வென்றெடுக்க கரிபால்டி அமைத்த படைவீரர்களின் பெயர் செஞ்சட்டையினர், (Red shirts) கரிபால்டியும் அவனுடைய செஞ்சட்டை வீரர்களும் தென் இத்தாலிய வேற்றரசர்களைத் தாக்கினர். வெற்றி மேல் வெற்றி பெற்ற கரிபால்டியின் படைகள் உரோமாபுரி வரை முன்னேறிவிட்டது. உரோமாபுரிக்குத் தெற்கே இருந்த இத்தாலியின் பரந்தநிலப்பரப்பு முழுமையாக கரிபால்டியின் ஆட்சிக்கும் கட்டுப்



வே. பிரபாகரன்

பாட்டிற்குள்ளும் வந்தது.

இதே நேரத்தில் சார்டினியா - பீட்மன்ட் என்ற தீவின் இத்தாலிய மன்னன் தன்னையும் இத்தாலிய விடுதலைப் போரில் ஈடுபடுத்திக் கொண்டான். அவனது பிரதம அமைச்சனுன கவுண்ட்கவூர் சாடினியா - பீட்மன்ற் படைகள் வட இத்தாலியை ஆட்சிசெய்து வந்த ஆஸ்திரிய அரசனைத் தாக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கினுன். விக்டர் இமானுவேலின் படைகள் வட இத்தாலியில் ஆஸ்திரியர்களுக்கெதிரான போரில் வெற்றிபெற்று வந்தன. சாடினியா படைகளும் ரோமாபுரியை நோக்கி நகர்ந்தன.

சாதாரணனுன கரிபால்டி எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான். வேற்றரசர்களை இத்தாலிய மண்ணிலிருந்து விரட்டி இத்தாலிய விடுதலையை வேண்டி நின்ற கரிபால்டி ஒரே இத்தாலிய அரசனுன விக்டர் இமானுவேல் வட இத்தாலியிலிருந்து ஆஸ்திரியர்களை விரட்டி அடித்ததை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் பார்த்தான். ரோமாபுரி வரை வந்த கரிபால்டி தனது வீரத்தால் வெற்றிபெற்ற முழுப்பகுதியையும் விக்டர் இமானுவலிடம் கையளித்தான். விக்டர் இமானுவல் விடுதலைபெற்ற இத்தாலியின் அரசனுனுன்.

நாட்டின் அரைப்பங்கிற்கு மேலான பகுதியை விடுவித்துத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த கரிபால்டியோ பெற்றுக்கொண்டது ஒரு பை நிறைய தானிய விதைகள் மட்டும் தான். இத்தாலியின் பெரும் பகுதிக்கு அரசனுக வந்திருக்கக் கூடியவன் அனைத்தையும் துறந்து ஒரு சாதாரண விவசாயி ஆகினுன். மகிழ்ச்சியோடு தனது வெற்றிகளையெல்லாம் விக்டர் இமானுவேலுக்கு கையளித்து விவசாயி ஆக மாறிய கரிபால்டி விரைவில் கண்ணீர்விட்டான். சாடினியா -பீட்மன்ட் அரசன் மேற்கொண்ட போரின் இறுதியில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது கரிபால்டி பிறந்த மண்ணை நீஸ் என்ற இத்தாலிய நகரத்தை-விக்டர் இமானுவேல் விட்டுக்கொடுக்க நேர்ந்தது. 'ஐயோ நீசா! எனது தாயகத்தை என்னிடமிருந்து கொள்ளை அடித்துவிட்டார்களே! (Poor niza they have robbed me of my fatherland) என்று அந்த மாவீரன் கரிபால்டி சாதாரண விவசாயி ஆகஇருந்து கண்ணீர் விட்டான்.

சென்ற 4-ஆந் திகதி சுதுமலையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் பொதுக்கூட்டத்தில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையைக் கேட்ட பொழுது-தொலைக்காட்சியில் பார்த்தபோது - கரிபால்டியின் எண்ணம் ஏற்பட்டது. முதலமைச்சர் பதவி ஏற்கேன் - தேர்தலிலும் போட்டியிடேன் என்று தலைவர் பிரபாகரன் கூறியதுபோது வெற்றி அனைத்தையும் விக்டர் இமானுவலுவிடம் கையளித்து விவசாயி ஆக மாறிய கரியால்டியின் சுத்தவீரம் அவரில்தெரிந்தது.

இந்தியாவின் நிலைப்பாட்டினுல்தான் தூக்கிய ஆயுதத்தை தமிழ் ஈழத்தை அமைக்க முன்பே கையளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனுல் திரு.பிரபாகரனின் தோற்றத்திலும்—பேச்சிலும் ஒரு சோகம் இழையோடியிருந்தது. அதைப்பார்த்த பொழுது நீசாவைக் கொள்ளையடித்துவிட்டார்களே என்று அழுத கரிபால்டியின் எண்ணம் மனத்திரையில் தோன்றியது. ★

# வளைகுடா நெருக்கடியும் மக்கா படுகொலைகளும்

## ஈரான் பழிவாங்கத் துடிக்கிறது

வளைகுடாப் பகுதியில் தற்போது உருவாகி வரும் புதிய நெருக்கடி நிலை அப்பிராந்தியத்தில் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகிறது.

ஈரான் ஒரு புறமும் அமெரிக்காவும் அதன் வளைகுடா நட்பு நாடுகளும் மறுபுறமும் கச்சை கட்டிக் கொண்டு நிற்கின்றன.

தற்போதைய நிலைமை நீடிக்கும் பட்சத்தில் மத்திய கிழக்கில் சர்வதேச எண்ணெய் சப்ளைக்குப் பெரும் குந்தகம் ஏற்படலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அமெரிக்க நடவடிக்கையால், ஏற்கனவே மோசமடைந்துள்ள வளைகுடா நெருக்கடி கடந்தவாரம் முஸ்லிம்களின் புனித ஸ்தலமான மக்காவில் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து விசுவரூபம் எடுத்துள்ளது.

தனது யுத்தக் கப்பல்களை வளைகுடாப் பகுதிக்குள் அனுப்பியது மூலம் பிரான்ஸும் இந்த நெருக்கடிக்குள் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொண்டு வருகிறது.

**மக்கா படுகொலை**

வளைகுடா நெருக்கடியில் தற்போது புதிதாக ஏற்பட்டுள்ள திருப்பத்துக்குக் காரணம் மக்காவில் நடந்த படுகொலைகளே ஆகும்.

ஹஜ் யாத்திரிகர்கள் மத்தியில் மக்கா பெரிய பள்ளிவாசல் பகுதியில் இடம்பெற்ற குழப்பத்தின் போது 400க்கும் மேற்பட்டோர் கொல்லபபட்டுள்ளனர். இவர்களில் 300க்கும் மேற்பட்டார் ஈரானியர்கள்.

ஈரானியர் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து வன்செயல்கள் வெடித்தன என்று சவூதி அரேபிய அரசாங்கம ஈரான் மீது குற்றஞ் சாட்டி உள்ளது.

ஷியா முஸ்லிம்களின் ஆத்மீகத் தலைவரும் ஈரானின் புரட்சித் தலைவருமான ஆயதுல்லா கொமேனியின் தலைமையை முஸ்லிம் உலகை ஏற்கச் செய்யும் சதி முயற்சியில் ஈரான் ஈடுபட்டிருப்பதாகவும் சவூதி அரேபியா கூறுகிறது.

இந்தப் படுகொலைகளுக்கு அமெரிக்க—சவூதி அரேபிய சதியே காரணம் என்று ஈரான் கூறி வருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஈரானில் உள்ள சவூதி அரேபியத் தூதரகமும் குவைத் தூதரகமும் தாக்கப்பட்டுள்ளன.

இதற்காக அமெரிக்காவையும் சவூதி அரேபியாவையும் பழிவாங்கப் போவதாக ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனி பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

**ஒத்திகை**

பிரச்சினைக்குரிய ஹோர்முஸ் நீரிணையில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள ஈரானிய கடலில் ஈரான் தனது மூன்று நாள் கடற்படை ஒத்திகையை கடந்த புதன் கிழமை ஆரம்பித்ததை அடுத்து நெருக்கடி மேலும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

தனது கடல் பிராந்தியத்தில் ஒத்திகை நடத்த ஈரானுக்கு உரிமை உண்டு என்று கூறி உள்ள அமெரிக்கா வளைகுடாவில் 11 குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தனது நடவடிக்கை தொடரும் என்று அறிவித்துள்ளது.

அமெரிக்காவையும் சவூதி அரேபியாவையும் பழி வாங்கத் துடிக்கும் ஈரானின் ஆத்மீகத்தலைவர் ஆய துல்லா கொமேனியின் எச்சரிக்கை —

ஈரானின் கடற்படை ஒத்திகை —

குவைத் எண்ணெய்க் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் தனது முடிவை மாற்றுவதற்கு மறுக்கும் அமெரிக்காவின் பிடிவாதம்—

ஆகியவை வளைகுடாப் பிராந்தியத்தில் மீண்டும் யுத்த மூட்டங்களை ஏற்படுத்தி உள்ளன.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் யுத்த நிறுத்த தீர்மானத்துக்கு எதிராக ஈரான் — ஈராக் போர் தொடர்கிறது'

ஈரானுல் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சீனுவின் பட்டுப்பூச்சி (சில்க்வோர்ம்) ஏவுகணைகள் எண்ணெய்க்கப்பல்களுக்குப் பெரும் பயமுறுத்தலாக இருப்பதுடன் ஈரான் வளைகுடா யுத்தத்தைத் தொடர்வதற்கு மேலும் தூண்டுதலாக இருந்து வருகின்றன.

சனத்தொகையில் ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈராக்கிலும் ஈரானைப் போன்று ஷியா முஸ்லிம்களின் ஆட்சியை ஏற்படுத்துவதை இலட்சியமாகக் கொண்ட ஈரானின் தற்போதைய தலைமைப்பீடம் இருக்கும் வரை வளைகுடா யுத்தம் தொடரும் சாத்தியம் நிலவுகிறது. ★

உலக உலா

# இந்திராவின் கருணை உள்ளம்

தந்தை நேரு இறந்த தினம். அவர் காரியாலயத்தில்வேலை செய்பவர்கள் இரவுபகலாய் அங்கே தங்க வேண்டி இருந்ததால் அவர்களின் உடைகள் கசங்கியும் அழுக்குடனும் காணப்பட்டது. அந்த சோக நிலையிலும் இதை அவதானித்துவிட்டார் இந்திரா அவர்கள். எல்லோரையும் அழைத்து இம்மாதிரி வைபவங்களில் கசங்கிய உடைகளுடன் நீங்கள் இருப்பது சரியல்ல. எல்லோரும் உடனே உங்கள் வீடுகளுக்குப்போய் குளித்து வேறு உடை அணிந்து திரும்பிவாருங்கள் என உத்தரவிட்டார்.

ஜனதா ஆட்சிக்காலம் இந்திரா காந்தியையும் அவரின் அந்தரங்க காரியதரிசியையும் சிறையில் வைத்திருந்தார்கள். நத்தார் பண்டிகையன்று இந்திராகாந்திக்கு வீட்டிலிருந்து தின்பண்டங்கள் வந்திருந்தது. தான் மட்டும் அவற்றை எடுக்காமல் பாதியை அவர் காரியதரிசிக்கும் கொடுத்தனுப்பிவிட்டார். எப்போதும் மற்றவர்கள் [illegible] தான் தலக்கென்று வாழாமல் எல்லோருக்கும் [illegible] கொடுத்து வாழ்வதில் தான் எத்தனை மனநிறைவு! ★

சுரேஷ் - ஈஸ்வரதாஸ்

★ ★ ★

**கல்வி**

கணிதம் ஆண்டு-8, ஆண்டு - 10, பல்தேர்வு வினுக்கள் மயூரதி வெளியீடுகளாகும். விற்பனையாகின்றன. மாணவர் விடுதலை நாட்களில் தாமாகவே மீட்டல் செய்ய உதவும் நூல்களாகும். கிடைக்கும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை. (1456)

## - புலி -

புலிக்கு ஆங்கிலத்தில் ''டைகர்''என்று பெயர் அது ஆங்கிலச் சொல் அல்ல. பாரசீகச் சொல். ''டைகர்'' என்பது அம்பின் பெயர். அம்பு நாணேற்றி விடுங்கால் வேகமாகச் செல்கிறது. புலி அதேமாதிரி வேகமாகப் பாய்வதால் அதற்கு அப்பெயர் இடப்பட்டது.

[illegible] குசைதாசன்

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ அவுஸ்திரேலியா

நாட்டிற்கு விசா, பிரயாணச்சீட்டு உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

★ சிங்கப்பூரில் கட்டிடக் கூலி வேலை

★ சிங்கப்பூரில் பணிப்பெண்கள் உடன் தேவை

6 பாஸ்போட் படமும், ஒரு முழுப்படத்துடனும்

● நேரில் தொடர்பு கொள்ளவும் ●

✯ பாஸ்போட் ✯ பொண்ட்

✯ பிரயாணச்சீட்டுக்கள் ✯ இந்தியன் விசா

✯ Confirmation Re-confirmation ✯

பாஸ்போட் புதுப்பித்தல்

● வெளிநாட்டு தந்திசேவைகள், ரெலெக்ஸ் சேவைகள் ●

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்

நிப்பொன் ரெலிரவல்ஸ்

(பிறைவேற் லிமிட்டெட்)

No. 2, G ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

i. எம்மிடம் கீழ்வரும் வேலைவாய்ப்புகள் உண்டு,

1. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Labourers / Cleaners வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்

சம்பளம் 350-S.R

2. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு

Maintenance Cleaners (பராமரிப்பு வேலையாளர்கள்)

சம்பளம் ரூ. 500-- .R

சாப்பாட்டு, இருப்பிட வசதியுடன் ஒருமாத காலத்துள் பயணம் மேற்கொள்ளலாம்.

ii ஏற்கனவே விசா வந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் அத்துடன் ஈராக் நாட்டிற்கு பாஸ்போட் தந்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

iii. ★ புறூனை (BRUNEI) ★

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு Cleaners (கிளீனேர்ஸ்) வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் உண்டு.

சம்பளம் 250 U. S. டொலர்

(சாப்பாடு இருப்பிடவசதிகளுடன்)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

● மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

★ T. இந்திரநாதன் ★

(EVER - REST)

96, கச்சேரி நல்லூர் வீதி,

யாழ்ப்பாணம்.

(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலக பத்திரிகைகளின் நோக்கில் - ஒப்பந்தம்

மேற்கு ஜேர்மன் தலைநகர் 'பொன்'னில் இருந்து வெளியாகும் பிரபல நாளிதழ் 'த ஜெனரல் அன்ஸீஜர்'.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்து அந்த நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் வருமாறு:

அதிர்ஷ்ட நட்சத்திரத்தின் பார்வையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

திட்டமிட்டபடி ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஆனால் சூழ்நிலைகள் நம்பிக்கை தருவனவாக அமையவில்லை.

நாட்டில் ஊரடங்கு அமுலில் இருந்தது. ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இலங்கை அரசு அமைச்சரவை பிளவுபட்டுள்ளது. பிரதமர் காந்தியின் விஜயம் பிரதமர் பிரேயதாஸாவினால் பகிஷ்கரிக்கப்பட்டது.

இந்திய நிர்ப்பந்தம் காரணமாக புதுடில்லியும் கொழும்பும் ஒப்பந்தத்தை உருவாக்கின.

பாரபட்சம் காட்டப்பட்டுவந்த சிறுபான்மையோரான தமிழருக்கும் பெரும்பான்மையோரான சிங்களவருக்கும் சம உரிமைகள் கிடைக்க ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்புடன் அரசியல் சுயாட்சியுடன் கூடிய ஓர் அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு தமிழருக்குக் கிடைத்துள்ளது.

இரண்டாவது தேசிய மொழியாக தமிழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் இருதரப்பிலும் திருப்தியை ஏற்படுத்தும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

கூடுதலாகத் தேவை என்று கூறுகின்றனர் தமிழர்கள். ஒப்பந்தம் கைச்சாத்தான 72மணித்தியாலங்களில் ஆயுதங்கள் ஒப்படைக்கப்படவேண்டும் என்பது குறித்து போராளிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஆயுதப்படையினரின் தயவில்தான் இனி இருக்கவேண்டும் என்ற நிலைகுறித்து அவர்கள் அச்சப்படுகின்றனர்.

ஒப்பந்தம் தமிழருக்குச் சாதகமானது என்று சிங்களவர் கருதுகின்றனர். சிறிய இடத்தைக் கொடுத்தால் தமிழர் முழு இடத்தையுமே பிடித்து விடுவர் என்று சிங்களவர் சந்தேகப்படுகின்றனர்.

நீண்டகால அடிப்படையில் பார்த்தால் சிங்களவரின் அச்சம் முழுதாக ஆதாரமற்றது என்று கூறிவிட முடியாது.

இலங்கையில் பெரும்பான்மையினர் சிங்களவர். ஆனால் இந்திய உபகண்ட நாடுகள் மத்தியில் சிங்களவர் சிறுபான்மையினரே. இந்தியாவின் ஆதரவு தமிழருக்கே உண்டு.

இக்காரணங்களை வைத்து ஒப்பந்தத்தை எதிர்ப்பது நியாயமாகாது.

ஒப்பந்தத்தை வைத்து கட்சி அரசியலில் நடத்துவதில்தான் பெரும்பாலான அரசியல்வாதிகள் நாட்டம் காட்டுகின்றனர்.

இலங்கையின் வாழ்வா, சாவா என்ற நிலைபற்றி அக்கறை காட்டுவதாக அவர்கள் போக்கு அமையவில்லை.

ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் உள்ள வெற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன காட்டும் அவதானத்திலும் ஊக்கத்திலும்தான் தங்கியுள்ளது. உத்தரவாத நாடான இந்தியாவும் இதில் முக்கிய பங்கு ஆற்ற வேண்டியுள்ளது.

உள்ளூர் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கி உள்ள பிரதமர் காந்திக்கு வெற்றி என்பது அவசியம் தேவைப்படுகின்றது.

கொழும்பு ஒப்பந்தம் அந்த வெற்றியைக் கொடுப்பதாக உள்ளது.

பெருமையைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் அவசரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமா இது என்பது எதிர்காலம் தான் சொல்ல வேண்டும்.

5 கோடி தமிழ்நாட்டுத் தமிழரின் ஆதர



ஜே. ஆர். — ராஜீவ் சந்திப்பு

வைப் பெறவேண்டிய நிலையில் உள்ள பிரதமர் காந்தி ஒப்பந்தத்துக்கு இலங்கைத் தமிழரின், முக்கியமாக போராளிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வாரா என்பதை இனித்தான் நிரூபிக்க வேண்டும்.

**'இரண்டாவது சைப்பிரஸ்' உருவாவதைத் தடுக்கும் ஒப்பந்தமாக இது அமையலாம்.**

இரண்டாவது 'சைப்பிரஸ்' உருவாவதைத் தடுக்கும் ஒப்பந்தமாக இது அமையலாம்.

மத்திய தரைக்கடல் தீவான சைப்பிரஸ் 1974 இல் படைப்பலத்தினால் பிரிக்கப்பட்டது.

கிரேக்கர்களும் துருக்கியர்களும் நீண்ட காலமாக சமாதானமாக வாழ்ந்து வந்தனர்.

இருதரப்பினரில் உள்ள தீவிரவாதிகள் தான் மோதலைப் படிப்படியாக வளர்த்து வந்தனர். இப்படித்தான் சிவில் யுத்தம் தொடங்கியது.

இறுதியில் பிரிவினை ஏற்பட்டது.

இலங்கைக்கு இந்த நிலைமை ஏற்படாது என்று நாம் நம்புவோமாக!

★

டி.பி.ஏ. செய்திஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. கிறிஸ்டியன் பெரஸெஸ்ட் எழுதுவதாவது;

இந்திய - இலங்கை ஒப்பந்தம், 1948இல் பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக இருந்த இலங்கையின் அரசமைப்பில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளது.

முன்னர் 'சிலோன்' ஆக இருந்து 'ஸ்ரீலங்கா' ஆக பின்னர் மாறிய இலங்கையில் இந்த ஒப்பந்தம் சமஷ்டி ஆட்சி ஒன்றை ஏற்படுத்தும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

சுயாட்சி அதிகாரங்களைக் கொடுக்கும், விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படும் மாகாண நாடாளுமன்றங்கள் அமைக்கப்படுவது பிரதான மாற்றங்களாக அமையவுள்ளன.

இம்மாற்றம் சிறுபான்மையினரை ஒதுக்கும் 'முதல் வருபவர் வெற்றி'

**சுயாட்சி அதிகாரங்களைக் கொடுக்கும், விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படும் மாகாண நாடாளு மன்றங்கள் அமைக்கப்படுவது பிரதான மாற்றங்களாக அமையவுள்ளன.**

என்ற பிரிட்டிஷ் வாக்களிப்பு முறையைமாற்றி அமைக்கவுள்ளது.

உள்ளூர் கல்வி, பொலீஸ், பொருளாதாரத் திட்டமிடல், குடியமர்த்தும் கொள்கை ஆகிய அதிகாரங்கள் கொண்டவையாக மாகாண நாடாளுமன்றங்கள் இருக்கும்.

ஒப்பந்தத்தின்கீழ் இவ்வருட இறுதிக்குள் 435 கிலோ மீட்டர் நீளதீவில் தேர்தல்கள் நடைபெறும்.

இந்த ஒப்பந்தத்தில் எதிர்பார்க்காத ஓர் அம்சம் இடம்பெற்றுள்ளது.

'கொழும்பு அரசு கேட்கும்போது இராணுவ உதவி வழங்கப்படும்'' என்பது தான் அந்த அம்சம்''. ★

★

கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் வருமாறு;

இந்திய - இலங்கை ஒப்பந்தம் துணிச்சலான ஒன்று.

உள் நாட்டில் மட்டும் அன்றி உலக அரங்கிலும் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு நல்க வேண்டும்.

முந்திய அரசு யோசனைகளிலும் பார்க்க தமிழருக்குக் கூடுதலான சலுகைகளை இந்த ஒப்பந்தம் வழங்கியுள்ளது.

அரசியலில் நடுநிலையான யோசனைகளுக்கு இரு தரப்பில் இருந்தும் எதிர்ப்புக்கள் வராமல் இருக்கா. ஒப்பந்தத்தை இருதரப்பிலும் உள்ள தீவிரவாதிகள் எதிர்க்கின்றனர்.

சமாதானத்தைக் கொண்டு வரும் முயற்சிகளில் பொறுமை இழந்து விட்ட நிலையில் பிரதமர் காந்தி, தமிழர் மீதான தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இதனைச் சாதித்திருக்கின்றார்.

இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியா அமைதிப்படையை அனுப்பி வைத்துள்ளது.

பழிவாங்கப்படுவோம் என்ற பயமின்றி ஆயுதங்களைக் கீழே போடலாம் என்று தமிழருக்கு உறுதி கூறுவதாக இது அமைந்துள்ளது. அதே நேரத்தில் இந்த அமைதி காக்கும் படையின் பணி வரையறுக்கப்பட்டது என்று சிங்களவருக்கும் உறுதி கூறப்படவேண்டும்.

எப்படியிருப்பினும் தற்போதைய நிலை.

**மிதவாதம், நம்பிக்கை ஆகிய சூழ்நிலையை உருவாக்குவதில் தான் ஒப்பந்தத்தின் வெற்றி முக்கியமாகத் தங்கியுள்ளது.**

பாட்டை எடுக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன குறிப்பிடத்தக்க அளவு துணிச்சல் காட்டியிருக்கின்றார்.

மிதவாதம், நம்பிக்கை ஆகிய சூழ்நிலையை உருவாக்குவதில் தான் ஒப்பந்ததின் வெற்றி முக்கியமாகத் தங்கியுள்ளது.

''வாஷிங்டன் போஸ்ட்'' ஆசிரியர் தலையங்கம் வருமாறு;

இந்த உலகில் சிறிது அளவு நீதி இருக்குமானால் ஜனாதிபதி ஜெயவர்த்தன வழங்கிய அரசியல் தீர்வு இலங்கைக்கு இப்போது தேவைப்படும் நிம்மதியைக் கொடுக்கும்.

இலங்கை ஒரு நட்பு நாடு. மற்றவருக்கு துன்பம் கொடுக்காத ஜனநாயகநாடு. பொதுமக்களுக்குச் சேவை செய்ய விரும்பும்நாடு இலங்கை.

உண்மையிலேயே தமிழருக்கு சமூக, பொருளாதாரக் குறைபாடுகள் இருந்தன. கடைசியில் அவற்றைச் சிங்கள மக்கள் அங்கீகரித்து விட்டனர் என்று தெரிகிறது.

தமிழருக்கு சுயாட்சி வழங்க முன் வந்ததன் மூலம் பெரும்பான்மை

**தென் ஆசியாவில் இந்தியா பெரிய சக்தியாக விளங்குகின்றது. இதனால் இந்தியாவின் பங்கு முக்கியமாகி விட்டது.**

இன மக்கள் மத்தியில் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே புதிய உறவுகளை வளர்க்க முடியாத பிரச்சினை தான் இலங்கையில் இருந்து வந்தது

இதனாலிலங்கைஇந்தியாவுடன் இணைந்து செயல்பட வேண்டியதாயிற்று.

இலங்கையையும், இந்தியாவையும் சிறிய நீரிணைதான் பிரித்து உள்ளது. இந்தியாவில் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

தென் ஆசியாவில் இந்தியா பெரிய சக்தியாக விளங்குகின்றது.

இதனால் இந்தியாவின் பங்கு முக்கியமாகி விட்டது.

அண்மைக்காலம் வரை இந்தியாவின் பங்கு பலனளிப்பதாக இல்லை. உண்மையில் தமிழ்ப் பிரிவினைவாதத்தை இந்தியா ஊக்குவித்து வந்தது.

எப்படியோ இந்தியாவின் முழுப்பொறுப்பையும் பிரதமர் காந்தி உணர்ந்து, இலங்கையுடன் சேர்ந்து ஒரு தீர்வைக் கொண்டு வந்திருக்கின்றார்.

உள்நாட்டில் பிரதமர் சாந்தி பாதகமான அரசியல் நிலைமைக்கு ஆளாகினார்.

சரியான தருணத்தில் தனது தலைமைத்துவத்தைநிரூபிக்கபிரதமர் காந்தி கையாண்ட துணிகரச்செயல் இது. ★

தமிழில் தருபவர்: தீபன்ராஜா

# சமாதானம், இனப்பிரச்சினை தீர்வு, பிராந்திய பந்தோபஸ்து
# இவைதான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் விளைவு

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் (15- 7- 1987) இதே இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் 'இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுதான் காணப்பட வேண்டும் - என்று கூறினேன்.

இன்று அந்த அமைதித் தீர்வு காணப்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் முக்கிய வட பகுதியில் வன்செயல்கள் நின்று விட்டன.

பொறுமை, பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் மூலம் இது சாத்தியமாயிற்று.

இலங்கை வன்செயல்கள் எமக்குக் கவலையைத்

**இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதியில் தமிழ் மாகாணம் அமையப் போகின்றது.**

தந்தன. விமானக்குண்டுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் காரணமாக அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர். ஒன்றரை லட்சம் தமிழர்கள் அகதிகளாக இந்தியா வந்தனர். இத்துன்பங்களுக்கு முடிவு கண்டாயிற்று.

சுயாட்சி

தமிழருக்கு நீதி வழங்கக் கூடியதாக இந்த ஒப்பந்தம் அமைந்து உள்ளது. ஒப்பந்தம் சுயாட்சிக்கு வழிவகுக்கின்றது.

இந்திய மாநிலத்துக்கு உள்ள அதிகாரங்களை இலங்கைத் தமிழரும் பெற ஒப்பந்தம் வழி வகுத்துள்ளது.

தமிழரின் தனித்துவம், கலாசாரம் இதன் மூலம் பாதுகாக்கப்படும். ஏனைய இனங்களுக்கு உள்ளது போன்ற அரசியல் உரிமைகளைப் பெற்று சமத்துவமாக, கௌரவமாக, சுயமரியாதையுடன் பல நூறுண்டுகளுக்கு மேலாக இலங்கையில் தமிழர்கள் வாழ இந்த ஒப்பந்தம் வழி வகுத்து உள்ளது.

இலங்கை அரசின் அனுமதியுடன் தமிழர் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட எனது இராணுவத்தை அங்கு நான் அனுப்பி வைத்துள்ளேன்.

ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் போராளிகள் குறித்துப் பாதக நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்காது. நம்பக்கூடிய உறுதி மொழிகளை இலங்கை அரசு எமக்குத் தந்துள்ளது.

கொழும்பு போகும் முன்னர் நான் தமிழ்ப் போராளி அமைப்புக்களுடனும் தமிழ் மிதவாதத் தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்தினேன்.

நீதிக்கும் சமத்துவத்துக்குமாகப் போராடியவர்கள் அனைவருடனும் பேச்சுக்கள் நடத்தினேன்.

போராளி அமைப்புக்கள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதியில் தமிழ்



ராஜீவ்

மாகாணம் அமையப் போகின்றது. இம்மாகாணத்தில் தமிழருக்குத் தெளிவான பெரும்பான்மை இருக்கப் போகின்றது. 1983 இணைப்பு-சியிலும் பார்க்கக் கூடுதலான சலுகைகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழருக்குக் கிடைத்துள்ளன.

இனிப் போராட்டத்தை நிறுத்த வேண்டும்.

நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டியகாலம் இது. தேசிய இணக்கம் சமூகங்களுக்கு இடையே ஏற்பட வேண்டிய காலம் இது.

பிராந்தியப் பாதுகாப்பு

இந்த ஒப்பந்தம் தமிழருக்கு வளமான வாழ்வை ஏற்படுத்த உதவும். இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் தமிழரின் வளமான வாழ்வை எதிர்ப்பவர்களாகக் கருதப்படுவர். இவர்கள்மீது அனுதாபம் காட்டக்கூடாது.

—இப்பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையைவிரும்பாதவர்கள்.

—அணிசேரா இயக்கத்தில் இலங்கை – இந்திய நாடுகள் உறுதியாக நிற்பதை விரும்பாதவர்கள் ஆகியோர்தான் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்றனர்.

ஒப்பந்தத்தை எதிர்க்க வெளிச் சக்திகள்தான் தூண்டுகின்றன. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் முயற்சியில் இச்சக்திகள் ஈடுபட்டுள்ளன.

எமது பாதுகாப்பு அணிசேரா இயக்கத்தில் தான் தங்கியுள்ளது.

இலங்கையில் நிலைகொண்ட சிலசக்திகள் இப்பிராந்தியத்தைப் பல

**1983 இணைப்பு சி யிலும் பார்க்கக் கூடுதலான சலுகைகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழருக்குக் கிடைத்துள்ளன.**

வீணப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தன.

இந்த ஒப்பந்தம் தமிழருக்கு நீதி, நியாயத்தை வழங்கியதுடன் மட்டும் நிற்கவில்லை; இப்பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுவந்த விரோத சக்திகளின் செயற்பாடு [illegible] வைத்துள்ளது.

இந்த ஒப்பந்தம் எமது பிராந்தியத்தின் பாது

**இந்திய-இலங்கை ஒப்பந்தம் வெற்றி விழாவானதுகடந்த ஞாயிறு சென்னை மரீனா கடற்கரையில் நடந்தது.**

**இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடுக்கிளை - அனைத்திந்திய அண்ணா திமுகவும் சேர்ந்து இவ் விழாவை நடத்தின.**

**விழாவில் பிரதமர் ராஜீவ் காந்தி நிகழ்த்தியபேச்சின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

காப்பை உறுதிப்படுத்துகின்றது.

கடிதங்கள்

தமிழர் பற்றிய உடன்பாடு ஒருபுறமிருக்க இரண்டு நாடுகளின் தலைவர்கள் என்றமுறையில் நானும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கடிதங்கள்பரிமாறிக்கொண்டோம்.

எமது பிராந்தியப் பாதுகாப்புப் பற்றியதாக அக்கடிதங்கள் அமைந்துள்ளன.

எமது பிராந்தியத்துக்குள் எமக்குவிரோதமான சக்திகளை நுழையவிடாது பார்த்துக்கொள்வதை உறுதிப்படுத்துவதாக இந்தக் கடிதங்கள் அமைந்துள்ளன.

★ இலங்கை மண்ணில் இந்திய விரோத சக்திகள்செயல்பட முடியா.

★ திருமலை உட்பட இலங்கையின் சகலதுறைமுகங்களையும் இந்திய விரோதசக்திகள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படமாட்டாது.

★ வெளிநாட்டு ஒலிபரப்பு நிலையங்கள் இலங்கை மண்ணில் இருந்து இராணுவ ரீதியில் செயல்பட இடம



எம் .ஜி. ஆர்.

ளிக்கப்படமாட்டா.

இவற்றை உறுதிப்படுத்துவதாக பரிமாறப்பட்ட கடிதங்கள் அமைந்துள்ளன.

காந்திஜியின் அஹிம்சை வழியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனே உறுதியாக உள்ளார்.

பதில் குற்றச்சாட்டுக்களுக்கும் பழிவாங்குதலுக்கும் உரிய தருணம் அல்ல இது.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு உரிய நேரம் இது.

புனர் நிர்மாணஞ் செய்வதற்குரிய காலம் இது.

பல இனங்களுக்கு இடையே நட்புறவை வளர்க்கவும் பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் உரிய காலம் இது.

நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் மீண்டும் உறுதி செய்யும் காலம் இது.

வன்செயல்கள் நிறுத்தப்பட்டு புதிய உலகம் ஒன்றைப் படைக்க உள்ளோம்.

திருப்புமுனை

இந்தத் திருப்புமுனையில்......

வன்செயல்களில் உயிரிழந்த அப்பாவி மக்கள் குறித்து எமது இதயம் நெகிழ்கின்றது.

கணவனை இழந்து விதவைகளானோர்,

புதல்வர்களை இழந்த தாய்மார்,

சகோதரர்களை இழந்த சகோதரிகள்.

இப்படி அர்ப்பணமானவர்கள் எத்தனையோ பேர்.

இலங்கையில் தமிழர்கள் இன்னும் பல்லாண்டுகள் கௌரவம், சுயமரியாதை, சமத்துவமாக வாழும்போது தான் இவர்களின் தியாகம் நினைவு கூரப்படும்.

அதைத்தான் இந்த ஒப்பந்தம் சாத்தியமாக்கியுள்ளது.

இந்த ஒப்பந்தம் எமது நாகரிகத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. பொறுமை, கருணை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் அமைந்து உள்ளது.

உலக வரலாற்றில் பல

**இந்த ஒப்பந்தம் தமிழருக்கு நீதி, நியாயத்தை வழங்கியதுடன் மட்டும் நிற்கவில்லை; இப்பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுவந்த விரோத சக்திகளின் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.**

நாகரிகங்கள் இருந்துள்ளன. அவற்றில் ஒன்று, இரண்டுதான் காலத்தினால் அழிந்து போகாமல் இந்த நவீன உலகிலும் மிளிருகின்றன.

எமது நாகரிகமும் அவற்றில் ஒன்று.

பல நாகரிகங்கள் புதிய எண்ணங்களுடன் இணைந்து போகாத காரணத்தினால் மடிந்து உள்ளன.

தமிழில் தருபவர்: எஸ். ஜி.

எமது பலம் எம் சுய நம்பிக்கையில் தான் தங்கியுள்ளது.

இந்திய-இலங்கை உறவுகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் செல்கின்றது.

பாரதி கனவு

சுப்பிரமணிய பாரதியாரின் கனவை நாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# கன்றைப் பறிகொடுத்த தாய்

உதய சூரியன் தன் பொற்கிரணங்களைப் பரப்பி மேலெழுந்தான். காரிருள் கலைந்து பொன் மஞ்சல் போர்வை பூமியெங்கும் போர்த்தது. நேற்று இரவு நடந்த ஷெல் தாக்குதலின் தாக்கம் விலகவில்லை. மண்டைதீவு சடலியிலிருந்தும் கோட்டை முகாமிலிருந்தும் கண்மூடித்தனமாக ஏவப்பட்ட ஷெல்கள் விழுந்த இடமெல்லாம் கண்ணீரை வரவழைத்தது. கண்ணீர்க்கதைகள் எங்கும் வியாபித்தன. மரணத்தின்றும் தப்ப வழியின்றி மக்கள் இளைத்தார்கள். மரணம் வருவதை அறிவிக்க யார் இருக்கிறார்கள்.

கலியுகத்திற்கு முன் பறவைகள் மிருகங்கள் மனித பாஷை பேசியதாகத் தெரிகிறது. அவைகள் மரணத்தைக் கூட முன் அறிந்திருந்தன என்றும் கூறுவர். இன்னும் அவை வாய் திறந்து பேசினால் எவ்வளவு உயிர்ச்சேதம் தவிர்க்கப்படும் என்று சிந்தனையைப்பட்ட நான் மாட்டுத்தொழுவத்தில் நின்ற வெள்ளைப் பசுவையும் கன்றுக்குட்டியையும் உற்றுப் பார்க்கின்றேன். அது நன்றியுணர்வோடு நோக்குகின்றது.

கொழு கொழுவென்று வளர்ந்த செங்காரிக் கன்றுக்குட்டி துள்ளி விளையாடுகின்றது அதற்குப் பயமேது: இளங்கன்று பயமறியாததல்லவா! அதன் அழகை நான் ரசிக்கின்றேன்.

பயங்கரத்தமிழீழத்தில் பயமறியாது துள்ளுகிறது, இளங் குருத்தில் எல்லாமே அழகுதான். இன்று குழந்தைகள் கூடப் பதுங்கு குழியில் பிறக்கின்றன; என்ன அவலம். ஆதி மனிதன் வாழ்க்கைக்கும் மனிதன் வந்து விட்டானா என்று சிந்திக்கின்றேன். மதிய போசனம் உண்ட களை மேலிடுகின்றது. கண்ணைச் சொருகுகின்றது: சிறிது படுக்கச் செல்கிறேன். எல்லோரும் பகல் கோழித்தூக்கம் போடுகிறார்கள். நானும் படுக்கைக்குச் செல்கிறேன்.

பசுவும் கன்றும் மாட்டுத்தொழுவத்தில் நின்ற உணவை இரை மீட்கின்றன. அவை தங்கள் பரிபாஷையில் பேசிக்கொள்கின்றன. மனிதன் எவ்வளவு சோம்பேறி. உண்டவுடன் தூங்கும் மூஞ்சி. நாம் உண்ட பின்னும் உறங்கவில்லையே. சோம்பேறித்தனம் மனிதனை ஆட்சி கொண்டு விட்டது. விஞ்ஞான வளர்ச்சி மனிதனை இவ்வாறு செய்து விட்டது ஆதிமனிதன் இப்படியா வாழ்ந்தான்.

''அம்மா மனிதர்கள் என் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். இவர்கள் கூட்டமாக ஏன் வாழ்வதில்லை. ஒற்றுமை இல்லையா?''

''மனிதன் ஒற்றுமையாகக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். அறிவுவளர அவனது ஒற்றுமை குறைந்து விட்டது. போர்கள், உயிர்ப்பலிகள் பெருகிவிட்டன. மனிதரை மனிதன் பிடித்துத் தின்னும் அளவிற்கு வளர்ந்து விட்டது.''

''எங்களுக்குக் கோபம் வந்தால் நேருக்கு நேர் சண்டையிடுவோம். ஒன்றில் கொலை, இல்லையேல் பயந்து ஓடும் மனிதர்களின் சண்டை ஏன் இப்படி?.

மனிதர் நேருக்கு நேர் சண்டையிடுவதில்லை: மறைந்திருந்தே அழிப்பர். பண்டைக் காலப் போருக்கும் இப்போதைய போருக்கும் நிறைய வேறுபாடு. அன்று போர்க்களத்தில் படைவீரர்கள் நேரில் போரிட்டனர். இன்று பலமைல் தொலைவிற்கு மனிதனால் தாக்க முடியும். சாதாரண மக்களும் இதனால் அழிவுறுவர்.

போரின்றி மனிதர் வாழ முடியாதா? அவனுக்கு வாழத் தெரியாதா? நாங்கள் சண்டையிடுவது இல்லையே.

எங்களுக்கு ஐந்தறிவு மனிதனுக்கு ஆறறிவு. அறிவு கூடியதனால் வந்த வினை. அடக்கியாள வேண்டும் என்ற ஆணவம். மனிதன் குணத்தை மாற்றமுடியாது''

''எங்களுக்குப் பழைய படி பேசும் சக்தி கிடைத்தால் இவர்களைத்திருத்த முடியாதா. இவர்கள் திருந்தமாட்டார்களா''

''வாய் பேசாத எம்மையே எவ்வளவு கொடுமை செய்கிறார்கள். அவர்களுக்கு ஈவு இரக்கமே இல்லை. நீ பேசாமல் இரு''— என்றது.

தாயின் கட்டளைக்குப் பணிந்த கன்று பேசவில்லை. இரண்டும் மௌனமாக நின்றன. வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கம். பகலில் தூங்கி வழிந்தனர். பசுவிற்கு ஓர் மரண அறிவிப்பு வாய் பேச முடியவில்லை. கோட்டையிலிருந்து ஷெல் அடிக்கப் போகிறார்கள் இன்னும் சிறிது நேரத்தில் இவ்வீட்டைமுதல் ஷெல் தாக்கப் போகிறது. எல்லோரும் சமாதியாகப் போகிறார்கள். எப்படியும் இவர்களைக் காப்பாற்ற வேண்டும்.

''அம்மா அம்மா'' என்று தொடர்ந்து ஓலமிடுகின்றேன். கன்றும் என்னுடன் சேர்ந்து கொண்டது. எமது ஓலம் வீண் போகவில்லை. எஜமானர் தொந்தரவு தாங்காமல் விழித்துக்கொண்டார். எங்களைத் தேடி வருகிறார். நன்றியோடு பார்க்கின்றேன். எஜமானர் கண்களில் கோபாவேஷம். நித்திரையைக் குழப்பி விட்ட கவலை பக்கத்தில் கிடந்த தடி எஜமானர் கையில் மாறுகின்றது எனக்கோ பயம் பற்றுகின்றது. முட்டாள் மனிதன் நான் செய்த நன்மையைக் கருதவில்லை, என்னைத் தாக்க வருகின்றான்.

அடிவிழுகின்றது. அவல ஓலம் எழுப்புகின்றேன். ஆத்திரம் அடங்கு மட்டும் அடிக்கின்றான். தடி சிதறிப் பறக்கின்றது. உடம்பில் தழும்புகள் நிறைகின்றன. என் கண்ணிலிருந்து கண்ணீர் சொரிகின்றது. பாழும் மனிதன் என்னை வதைக்கின்றான். அவனைக் காப்பாற்ற நான் கூப்பாடு போடுகின்றேன். என்ன விந்தை!

அடித்து அலுத்த அவனும் மீண்டும் படுக்கைக்குச்செல்கின்றான். வேதனையால் துடிக்கின்றேன். என்னைப்பார்த்து கன்றும் அழுகின்றது.

அம்மா உனக்கேன் வீண்வேலை. மனிதனுக்கு நன்மைசெய்தால் அவன் தீமை செய்வதாக நினைக்கின்றான். உயிரைக் காப்பாற்ற நினைத்தால் உன்னையே வதைக்கிறான்.

அவனுக்கு நான் புரியும்படி சொல்லமுடியவில்லையே. அவன் பசியில் கத்துவதாக நினைத்திருப்பான். அவனுக்குப் புரிந்திருந்தால் என்னை எப்படி வாழ்த்தியிருப்பான். போகட்டும் விட்டுவிடு, எப்படியும் காப்பாற்ற வேண்டும்.

எங்களைக் கயிற்றினால் கட்டிப் போட்டு இருக்கிறானே நாங்களே தப்புவது சிரமம். அவனுக்காக இரங்குகிறாய்.

அப்போது தான் தாய்ப் பசுவிற்கு தங்கள் நிலைமை புரிந்தது. எஜமானரைக் காப்பற்ற முயற்சித்ததே ஒழிய தங்கள் உயிரைப் பற்றி யோசிக்கவில்லை. தங்களைப் பலி கொடுத்தே எஜமானரைக் காப்பாற்ற நினைத்தது. நன்றியுணர்வுதான். இப்போது என்ன செய்வது.

''அம்மா நாங்கள் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடினால் எங்களைப் பிடிக்க வருவார்கள். நாங்களும் தப்பலாம். இனிமேல் கத்தினால் எஜமானர் உயிரை எடுத்து விடுவார்.



கன்று சொன்னது நல்ல முடிவுதான். நாமிருவரும் கயிற்றை அறுப்போம். பலம் கொண்ட மட்டும் இழுத்தேன். கயிறு அசையவில்லை. கழுத்து நொந்ததுதான் மிச்சம். துள்ளிக் குதித்துச் சுழன்று கயிற்றின் முறுக்கைக் குலைய வைத்தேன். ஒருவாறு கயிறு இறுக்கத்தை இழந்தது. உன்னிப் பலமுறை இழுத்தேன். கயிறால் என் இழுவைக்கு ஈடு கொடுக்கமுடியவில்லை. மெல்ல மெல்ல அறத் தொடங்கியது.

நான் முழுமையாக விடுபட்டேன். கன்றினால் விடுபட முடியவில்லை. நேரமோ நெருங்கிக் கொண்டிருந்தது.

மடி நிறைந்த பாலைக் கன்றுக்கு ஊட்டினேன். அது முட்டி முட்டிச் சுவைத்தது. கன்றிடம் அறுத்துக் கொண்டு வரச் சொன்னேன். என் பலம் கன்றிடமிருக்குமா பாவம். முயற்சி செய்தது.

நான் எஜமானரைக் காப்பாற்ற நினைத்தேன். கதவைப் பேய் தலையால் மோதினேன் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். கதவைத் திறந்த எஜமானர் மாடு அவிட்டுப்போட்டுதென்றார். எல்லோரும் என்னைப் பிடிக்கத் துரத்தினர். பின்னேரப் பால் கன்றுக்குப் போய் விட்டதே என்ற ஆத்திரத்தில் எல்லோரும் வெறிகொண்டு என்னைத் துரத்தினர். நான் அவர்களுக்கு அகப்படாது தெருவில் இறங்கினேன். அறுத்த கயிற்றுடன் என்னைப் பிடிக்க முடியவில்லை. எல்லோரும் தெருவிற்கு வந்து விட்டனர். திரும்பிப் பார்க்கிறேன் கன்றைக் காணவில்லை. கன்றுக்கு ஆபத்து என்று நெஞ்சு துணுக்குற்றது.

இவர்களையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைவில் துள்ளி ஓடுகின்றேன். 'டும்' என்ற பேரிரைச்சல் வீடு தூளாகிறது. மறுபடியும் ஒரு 'டும்' என்ற பேரிரைச்சல். அடுத்தடுத்து விழுந்த ஷெல் தாக்கி வீடு சேதமுறுகிறது. கன்றின் அவல ஓலம் என் நெஞ்சைத் துடிக்க வைக்கிறது.

விரைந்து ஓடுகின்றேன். வீடு நோக்கி 'அம்மா' என்ற குரல் கொடுத்தே ஓடுகின்றேன். அங்கே பரிதாபம், என்பிள்ளை இரத்த வெள்ளத்தில், கண்களில நீர் சொரிகின்றது. தாய்மைப் பாசம் பெருகுகின்றது. நாக்கினால் நக்குகின்றேன்.

நிமிர்ந்து பார்க்கின்றேன். எஜமானர் நன்றியுணர்வோடு என்னைப் பார்க்கிறார். மனைவிக்குக் கூறுகிறார். பசு பதறித்தது எதற்கு என்று இப்போதுதான் தெரிகின்றது. மரணத்தை அறிந்து எம்மைக் காக்கக் கத்தியது. நானோ மிருகத்தனமாக அடித்து விட்டேன். எங்கள் உயிரையும் அல்லவா காப்பாற்றி விட்டது.

மிருகங்களுக்கு மரணம் வருவது தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள்.

நன்றியுணர்வோடு என்னைத் தடவினார். அவரது செய்கை புரியவில்லை. என் கடமை நிறைவு செய்த மனத்தோடு பிள்ளையைப் பறிகொடுத்த மனச்சுமையோடு 'அம்மா அம்மா' என்று கத்துகின்றேன் என் மடியினின்றும்பால் சுரந்து வழிகின்றது. ★

- லோகன் -

# பார்த்தாலே பயம் தோன்றும் பழகினலோ அவர் ஒரு சாது

## நடைச்சித்திரம் 1

**தமிழருவி. த. சண்முகசுந்தரம்**

சிறுகதை, நாவல், நாடகம், நாட்டாரியல், கலைத்துறை, சமயம், தமிழியல் ஆய்வு முதலிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர் தமிழருவி த. சண்முகசுந்தரம். வாழ்க்கை வரலாறு நாவல், நாடகம் ஆகிய துறைகளுக்கான சாகித்திய மண்டல, இலங்கைக் கலைக்கழகப் பரிசுகளைப்பெற்ற எழுத்தாளர். ஏறத்தாழ இருபத்தைந்து நூல்களை வெளியிட்டுள்ளார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபராக இருந்து இளைப்பாறியவர்.

நம்மோடு வாழும், நினைவில் நிற்கும் சில மனிதர்களை அவர் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். ''பட்டாளம் பாட்டா'' என்பது அவர் நோய்வாய்ப்பட்டு, மறைவதற்கு முன் எழுதிய சொல்லோவியம் இந்த வரிசையில் அவர் எழுதியவற்றை அவர் குடும்பத்தினர் எமக்குத் தந்து உதவியுள்ளனர். இவற்றை வாசகர்கள் சுவைத்தின்புற சஞ்சீவியில் தொடர்ந்து வெளியிடுகிறோம்.

''பட்டாளம் பாட்டா'' என்றால் முருகபுரம் கிராமத்தில் எல்லோருக்கும் தெரியும். கிராமத்தில் அவரைத் தெரியாதவர் இல்லை. எந்த நல்ல அலுவல் கிராமத்தில் நடந்தாலும் பட்டாளம் பாட்டா அங்கே நிற்பார்.

அவரின் இயற்பெயர் முத்தையா அம்பலவாணர். ஊரிலுள்ள காலிப் பயல்கள் அவரைஅடைச்சல் குரல் அம்பலவாணர் என்பர். அவருடைய குரல் அரத்தினால் இரும்பைஇராவும்போது எழும்பும் ஓசைபோல இருக்கும். யாராவது அடைச்சல்குரல் அம்பலவாணர் என்று கேலிசெய்தால் குரலை இன்னும் அடைச்சலாக்கிப் பேசிக்காட்டுவார்.

**அவதாரபபடலம்**

நல்லவெள்ளைச்சட்டை, காக்கி அரைக்காற் சட்டை, அழகாக மினுக்கிய சப்பாத்து. இது பட்டாளம் பாட்டாவின் சீருடை. இரண்டாவது உலகப் பெரும் போரிலே அம்பலவாணர் பிரித்தானியப் படையிலே சேர்ந்தார். இதனால் இவரை எல்லோரும் பட்டாளம் பாட்டா என அழைப்பர். பட்டாளத்து முரட்டுக்குணம் எதுவும் பாட்டாவிடம் இல்லை. பசுப் போலச் சாந்தமானவர். மிதித்த இடத்துப் புல்லும் சாகாத தன்மையுடையவர். ஊர்ந்து போகிற எறும்புக்கும் கெடுதல் செய்யார்.

பிரித்தானியப் போர்ப் படையிலே சேர்ந்து களம்பல கண்டவர் அடைச்சல்குரல் அம்பலவாணர். அதாவது பட்டாளம் பாட்டா. அப்போது இவரின் இயற்பெயர் முத்தையா அம்



பலவாணர் குறுகிய பின் அது எம். ஏ. வார்ணர் ஆனது. அதுவே இன்றைய எழுத்துப்பெயர்.

அப்போது பெரும் போர் ஒன்று நிகழ்ந்தது. இயந்திரத் துப்பாக்கிகள் திடீரென வெடித்தன. பட்டாளம் பாட்டாவின் தளபதிக்கு ஆபத்து வந்துவிட்டது. உடனே பட்டாளம் பாட்டா திடீரெனப் பாய்ந்து தளபதிக்குக் கவசமாகத்தான் நின்றார். இதன் விளைவாக இவரின் இடது தோளில் குண்டு பாய்ந்தது. ஆறுமாதகாலமாக இவரின் கை வழங்காமலிருந்தது. படைக்குரிய மருத்துவமனையில் இவர் இருந்தார். இவரின் நிலையைக் கண்ட அந்தத் தளபதி இவருக்கு ஆயுட்கால ஒய்வூதியம் வழங்க வேண்டும் என மேலிடத்திற்குப் பரிந்துரை செய்தார். எனவே, இவருக்கு ஆயுள் உள்ளவரையும் ஆயிரம் ரூபா மாத ஒய்வூதியமாக வழங்கினர் பிரித்தானிய அரசினர். அத்துடன் சேவை நலப் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. முருகபுரம் திரும்பிய பாட்டா ஆயுள்வேத வைத்தியம் செய்வித்தார். அத்துடன் முருக வழிபாட்டிலும் ஈடுபட்டார். பலன் கை மீண்டும்வழமைபோல வழங்கியது.

தன்னுடைய மாமன் மகளை இளம் அம்பலவாணர் திருமணம் செய்தார். ஒரே ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்த இவரின் மனைவி பிள்ளைப்பெற்ற வீட்டிலேயே கண்ணை மூடிவிட்டார். 'வேண்டாம் இரண்டாம் தாலி கட்டும் வேலை' என இளம் அம்பலவாணர் மறுத்துவிட்டார். தன் மகளை வளர்த்தார். அவளுக்குத் திருமணமும் செய்து வைத்தார். அவளுடன் இப்போது வாழ்கின்றார்.

இளம் வயதிலே ஒய்வூதியம் பெற்ற இவர் ஊர்ப்பணியில் ஈடுபட்டார். தன்னை மறந்தார். ஊர்ப்பணியில் உழைத்து இன்பங் காணுவார். முருகபுரம் கிராமத்தில் வாழ்ந்த பண்டிதர் பரமசிவத்தின் பணி ஒரு பக்கம். பட்டாளம் பாட்டாவின் பணி ஒரு பக்கம். கோளாறு கோவிந்தரின் 'திருப்பணித் திருகுதாளம்' தனியே ஒரு புறம்.

பட்டாளம் பாட்டாவைப் பார்த்தால் பயங்கரத் தோற்றம். ஆறு அடி உயரம். இருநூறு இறுத்தல் நிறை. முறுக்கி விட்ட பட்டாளம் மீசை. கொட்டும் தேனீக்களின் கூட்டின் நடுவிலே இனிக்கும் தேன்வதை. அது போலத்தான் பாட்டாவின் இதயம். பயங்கரத் தோற்றம்; ஆனால் உள்ளே சாந்தமான இதயம். அவர் சிரித்தால் காட்டு யானை பிளிறுவதுபோல இருக்கும். நடந்தால் யானை நடை.

மூக்குப் பொடியைப் போட்டு உறிஞ்சி வருவதால் பெருத்த மூக்கு. மூச்சுவிட்டால் பொடி தான் பறக்கும். யந்திர சாலையின் புகை போக்கிக் குழாய் போல மூக்குப் பொடியும் நெடியும் வரும்.

பட்டாளம் பாட்டா எல்லா நல்ல வேலைகளிலும் ஈடுபடுவார். கடைசியிலே தனக்கு ஏதாவது காயத்தையோ, ஊறையோ உண்டு பண்ணி விடுவார். இது அவருக்குக் கடவுள் தந்த பரிசு. இப்போது பாட்டாவிற்கு வயது அறுபதுக்குமேல். ஆனால் பார்த்தால் நாற்பது என்றே சொல்லலாம். உடல் நலம் கெடவில்லை. இரும்பு போன்ற உடம்பு.

காலையில் உணவு அருந்தமாட்டார். சுத்த சைவம், மதிய வேளையில் அரைக்கொத்து அரிசிச் சோறு அவருக்கு வேண்டும். பயறு, கீரை, நல்லெண்ணை, மோர் எல்லாவற்றையும் குழைத்து உண்பார். பார்த்தால் கொத்தனாரின் உதவியாளர் சீமேந்து மணல் சேர்த்து மண்வெட்டியினால் குழைப்பது போல இருக்கும். இந்தக் குழையலுக்குப் பக்கவாத்தியமாக மிளகாய்ப் பொரியல் பத்துத் தேவை. அதன் பின்னர் ஒரு போத்தல் மோர். இரவிலே ஒரு போத்தல் பாலும் ஒரு வாழைப் பழமும் மட்டும் தான்.

இந்த இராட்சத தோற்றமுடைய சாது முருகபுரம் எங்கும் அலைந்து திரியும். கிராமத்து நிகழ்ச்சி எல்லாவற்றிற்கும் கைகொடுப்பார். கை என்றால் இரும்புக்கை செய்வதோ பண்பு நிரம்பிய அன்புச் செயல். ஊர் மக்கள் இவரைக் கைகொடுத்த கடவுளாகவே மதித்து வந்தனர்.

''பட்டாளம் பாட்டா கட்டாயம் கடவுளை அடைவர்.'' என ஊரவர் போற்றினர்.

(யாவும் கற்பனை)

# சின்னத்தம்பிப் புலவர் பாடிய கல்வளையான்

பழைய காலந் தொட்டு வழுக்கியாறு, கீரிமலைச்சாரலில் ஆரம்பமாகித் தென்மேற்கு முகமாகத் திரும்பி, கொல்லன்கலட்டி, அளவெட்டி, கந்தரோடை, சண்டிலிப்பாய், நவாலி ஆகிய கிராமங்களினூடாகப் பெருகிச் சென்று அராலிக்கடலில் சங்கமமாகி வருகின்றது கி.பி 7 ஆம் நூற்றாண்டுவரை இந்த ஆறு அகலமாகவும் ஆழமாகவும் காணப்பட்டது.

இவ்வரலாறு 'பண்டைய ஈழம்' என்ற நூலில் 'பால்டிவஸ்' என்ற வரலாற்றுசிரியரால் எழுதப்பட்டுள்ளது. கந்தரோடை இராசதானியாக இருந்த காலத்தில் இவ்வாறு வள்ளங்கள் மூலமாக பொருட்களை ஏற்றிச் சென்றன எனவும் கூறப்பட்டுள்ளது.


வழுக்கியாற்றங்கரையிலும், அயலிலிருக்கும் கிராமங்களாகிய; கொல்லங்கலட்டி, வறுத்தலை, அளவெட்டி கும்பழாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய இடங்களிலும், விநாயகரை ஸ்தாபித்து வழிபாடாற்றியதும் மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் முற்றாக மாறி அழகிய முகத்துடன் விளங்கினர் எனவும் அறியக் கூடியதாகவுள்ளது.

கல்வளைத் தலத்தில் எழுந்தருளியுள்ள கற்பக விநாயகரின் அருளொழுகும் திருவிழிகளையும், ஆண்டருளும் திருவடிகளையும் தரிசிக்க இந்திரனைப்போல் ஆயிரம் கண்களைப் பிரமன் தனக்குப் படைக்கவில்லையே என விநாயகரின் பெருமையைச் சின்னத்தம்பிப் புலவர் பாடுகின்றார்.

கல்வளைப் பெருமானை வழிபடுபவர் பிறவியுட் புகமாட்டார் எனவும் உணர்த்துகின்றார்.

- த. கோபாலசிங்கம் -

## முயன்று பாருங்கள்



**இடமிருந்து வலம்**

1. இதை வனந்திரம் என்றும் சொல்வர்
3. காடு
5. முனிவர்கள் செய்வது
6. ஒரு பறவை
7. நெற்குவியலில் கழிக்கப்படுவது— (இங்கு மாறியுள்ளது)
9. இந்தப் பெயரில் நீரிணை ஒன்றுண்டு (இங்குமாறியுள்ளது)
11. ஆடிப் பிறப்பன்று அருந்துவது
12. சிறையிலிருப்பவன்
13. இப்படி ஓர் இலக்கணம் உண்டு (இங்கு மாறியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இறைவனின் திருவடிகளில் செலுத்துவது
2. இது இப்போது எல்லோருக்கும் அதிகம்
3. சந்ததி
4. யாழ் வாசித்துப் பரிசாகப் பெற்ற இடம் (தலை கீழாயுள்ளது)
6. நேர்த்திக்கு இடுவது
8. இறைவனை இப்படிக் கையினால் வணங்க வேண்டும் (இங்குமாறியுள்ளது)
10. அரைவாசி.

## விடுகதைகள்

1. ஆடையுடன் இருந்தால் அவளைப்போலவே பெற்றெடுப்பாள். ஆடையை நீக்கினாலே அனைவர் பசியையும் போக்கிடுவாள். அவள் யார்?

2. சிறுவர் விளையாடவும் இது உண்டு. எதிரியை விரட்டவும் இது உண்டு. அது என்ன?

3: நெருப்பில்லாமல் வறுக்கும் வறை, அது என்ன வறை?

**விடைகள்**

1. நெல்
2. துவக்கு
3. ஏவறை

கே. விஜிதா,
இ. கெம்சலா,
திருஞானசம்பந்த வித்தியாசாலை,
வட்டுக்கோட்டை.

தயாரிப்பு:-
'ஸ்ரீ'

## லிங்கனும் கென்னடியும்

இருவருமே நான்கு எழுத்தைக் கொண்டவர்கள்.
இருவரும் வெள்ளிக்கிழமையே இறந்தார்கள்.
இருவரும் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவர்கள்.
லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டது 1860இல்
கென்னடி தேர்ந்தெடுக்கப்பட்டது 1960இல்
லிங்கன் பிறந்தது 1807இல்
கென்னடி பிறந்தது 1908இல்

## ஆடுகிறான் பொன்னூஞ்சல்

மங்காத மேனியெழில்
பொங்கியெழ ஐங்கரத்து
கல்வளையூர் கற்பகத்தான்
ஆடுகிறான் பொன்னூஞ்சல்
நீங்காது நிலாவதனில்
தங்கிவிட்ட காரணத்தால்
தேங்காமல் தினம் மனதில்
ஆடுகிறான் பொன்னூஞ்சல்

கந்தனுக்கு வள்ளியினைக்
கரம்பிடித்து வைத்தவன்
வந்தவர்க்கு வரமளித்தே
ஆடுகிறான் பொன்னூஞ்சல்
சங்கரன் பிள்ளையவன்
தங்கமலர் மேனியவன்
சங்கடங்கள் தீர்த்துவைத்தே
ஆடுகிறான் பொன்னூஞ்சல்

— சந்திரா தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் உணர்ச்சிகளுக்கு வடிகால் தேவை
# பெற்றோர்கள் அன்பினைப் பொழிய வேண்டும்

ஒரு குடும்பத்தில் வேலைக்குச் சென்று வரும் தகப்பனும், வீட்டிலிருந்து குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனித்து வரும் தாயும் காணப்படுவது சகஜமாக இருந்தது. ஆனால் இன்று இந்த நிலையிலும் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான குடும்பங்களில் தாய் தந்தை இருவருமே இன்று வேலைக்குச் செல்கின்றனர்.

பெற்றோர்கள் வீட்டிலிருக்கும் பொழுதுகூட, தங்களைக் கவனிக்காமல் வேலையில் மூழ்கி விடுகின்றனர் என்று பல குழந்தைகள் வருந்துகின்றனர். இக்குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் விளையாட ஆசைப்பட்டாலும் அது நடப்பதில்லை.

'என்னைத் தொந்தரவு செய்யாதே'

'நான் வேலை செய்து கொண்டிருப்பது உனக்குத் தெரியலையா?'

'இப்ப என்னை என்ன தான் பண்ணச் சொல்கிறாய்?'

இத்தகைய பதில்கள் குழந்தைகளின் ஆசைகளை நிராசையாக்கி, அவர்களை மீளாத ஏக்கத்தில் ஆழ்த்தி விடுகின்றன.

நீங்கள் வேலை முடிந்து வீடு திரும்பும்பொழுது, உங்கள் குழந்தைகள் உங்களது அரவணைப்பை எதிர் பார்க்கிறார்கள்.

அவர்கள் உங்களைத் தொடர்ச்சியாகப் பல மணி நேரத்திற்குப் பார்க்காததால், உங்களுடன் ஏகப்பட்ட விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஆவலுடன், அவர்கள் உங்களை அணுகுகிறார்கள். நீங்கள் அருகிலிருந்து, அவர்கள் கூறுவதைப் பொறுமையுடன் கேட்பீர்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வரும்படி நடந்து கொள்ளுங்கள்.

### கந்தோரிலேயே கவலையை மூட்டை கட்டி வைத்துவிட்டு வரவும்

'என் அப்பாவிற்குக் கந்தோரில் ஏதாவது கவலை ஏற்பட்டால் அதனால் ஏற்படும் கோபத்தை என் மீதும் என் தம்பி மீதும் தான் காட்டுவார். நாங்கள் சற்று உரக்கப் பேசினால் கூட அடிவிழும்'— இது ஒரு பன்னிரண்டு வயது சிறுமியின் சோகம்.

உங்கள் குழந்தைக்கு அன்பும், ஆதரவும், அரவணைப்பும் தேவை. உங்களைப் போலவே ஏதேனும் கவலை, அன்பு அவர்களுக்குப் பள்ளியில் ஏற்பட்டிருக்கலாம்.

நீங்கள் எப்பொழுதும் உங்களைப் பற்றியே சிந்தனை செய்து கொண்டிருந்தால்; அவர்களது உணர்ச்சிகளுக்கு வடிகாலே ஏற்படாது.

கந்தோரிலிருந்து திரும்பியவுடன், முதலில் உங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். கந்தோரில் உங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களை முதலில் ஜீரணித்துக் கொண்டு, லேசான மனதுடன் குழந்தைகளுடன் உரையாடுவது மிகவும் அவசியமானதாகும்.

தினமும் குழந்தைகளுடன் சேர்ந்து உணவருந்துதல், வீட்டுப் பாடங்களை எல்லாம் ஒழுங்காகச் செய்கிறார்களா என்று கவனித்தல், அவர்களுடன் சற்று நேரம் விளையாட்டாக சிரித்துப் பேசிக்கொண்டிருத்தல் போன்றவற்றை உங்களது முக்கிய கடமைகளாகக் கருதுங்கள்.

நீங்கள் வீட்டில் இல்லாத நிலையை அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதைப்பற்றி, அவர்களுடன் விவாதியுங்கள். அடிக்கடி வெளியில் செல்வதையும் தவிருங்கள்.

### உங்கள் குழந்தை கூறுவதை அக்கறையுடன் கவனிக்கவும்

''பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட வேண்டுமென்றால், பெற்றோர் குழந்தைகளுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்.''

''என் அப்பா பேப்பரைப்படித்துக்கொண்டே நான் கேட்டதற்கு பதில் சொல்வார்''

—இப்படி ஒரு சிறுமி

''எப்பொழுது பார்த்தாலும் டி. வி. பார்த்துக் கொண்டிருக்கும் பெற்றோருடன் என்ன பேச முடியும்?'' - இப்படி மற்றொரு சிறுமி.

ஏராளமான குழந்தைகள் தங்கள் மன உணர்வுகளைப் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். முக்கியமாக, தங்களது பிரச்சினைகளைக் கூறி ஆறுதல் பெற விரும்புகிறார்கள். ஆனால் பெரும்பாலான பெற்றோர் தங்களது குழந்தைகளின் நுண்ணிய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், அவர்களை ஒதுக்கி விடுகிறார்கள்.

உங்கள் குழந்தைகள் கூறுவதை அக்கறையுடன் கவனித்து, அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறினால், அது அவர்களுக்கு உணர்ச்சிப் பூர்வமான பாதுகாப்பை (motional security) அளிப்பதோடு, உங்கள் இருவரிடையேயும் நெருக்கத்தை விளைவிக்கும்.

1. ஒவ்வொரு குழந்தைக்கும் சிறிது நேரம் ஒதுக்குங்கள்.
2. உங்கள் குழந்தையின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்.
3. உங்கள் குழந்தை பேசும்பொழுது அவனது வார்த்தைகளையும், குரலில் வெளிப்படும் உணர்ச்சிகளையும் உற்றுக் கவனியுங்கள்.
4. குழந்தைகளுக்கு இஷ்டமான விஷயங்களைப் பற்றிப் பேச, அவர்களை அனுமதியுங்கள்.
5. நீங்கள் குழந்தையைப் புரிந்து கொண்டதை அவனுக்கு உணர்த்துங்கள்.
6. குழந்தையின் உணர்ச்சிகளையோ, கருத்துக்களையோ ஒரு பொழுதும் குறைவாக எடை போடாதீர்கள்.

### குழந்தைகளை விமர்சிக்காதீர்கள்

குழந்தைகளுடன் அமர்ந்து பேசுவதற்குக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அறம் வந்து காத்ததாமோ

அறமொரு வடிவம் தாங்கி
அவனியில் பிறந்த தென்றால்
திறமை சேர் ராமனன்றிச்
செகத்தினில் யாரு மில்லை.
விறல்மிகு ராம காதை
வீரத்தை மட்டு மன்றி
அறத்தையும் போற்று தென்றே
அனைவரும் அறிவர்: உண்மை.

சொல்லறம் காத்தற் காகத்
தூயவன் கானம் சென்றான்
வில்லறம் காத்தற் காக
வீழ்த்தினன் அரக்கர் கூட்டம்
இல்லறம் காத்தற்காக
ஒருத்தியை மட்டும் தொட்டான்
நல்லறம் காத்தான் ராமன்
நானதை மறுக்கவில்லை.

கூனியின் பகையும் ஒன்றே
கோசலை அன்பும் ஒன்றே
கானக வாழ்வும் ஒன்றே
காசினி அரசும் ஒன்றே
மானிட வடிவந் தாங்கி
வந்தவ ஞன ராமன்
ஞானியைப் போல வாழ்ந்தான்
நல்லறம் வெல்லும் என்றான்.

அறத்தினைத் துறந்த வாலி
அம்புக்குப் பலியே யானான்
புறநெறி சென்ற தாலே
ராவணன் புவியில் வீழ்ந்தான்
முறையிலா வழியில் சென்ற
சூர்ப்பனை மூக்கி ழந்தாள்
அறம் வெல்லும் என்றான் கம்பன்
அன்றைக்குப் பொருந்தக் கூடும்.

அறத்தொடு வாழ்ந்த மக்கள்
அகதிக ளாக இன்று
துறந்தனர் வீடு வாசல்
சுகபோகம் மாடு கன்று;
இறந்தனர் பலபேர் இன்றும்
இறக்கிறார் பலபேர்; ஆனால்
அறம் வந்து காத்த தாமோ
ஆத்திரம் வருகுதையா.

கடைகள் யாவையும் கொள்ளை யடிக்கையில்
கண்டபேர்களை வெட்டிச் சரிக்கையில்
மடையர் நூல்நிலை யத்தை எரிக்கையில்
மனித நீதியைக் கொன்று புதைக்கையில்
படையெனப் புறப்பட்ட புலையர்கள்
பயங்கரச் செயல் ஆயிரம் செய்கையில்
இடையிலே அறம் எங்கே ஒழித்தது
இந்த நாட்டில் தருமமும் வாழுதா?

நாலு திக்கிலும் ஷெல் வந்து வீழ்ந்திடும்
நடுவிலே வானம் குண்டு பொழிந்திடும்
பால் குடித்திடும் பச்சைக் குழந்தைகள்
பாவையர் இளம் காளையர் மற்றவர்
கோல் பிடித்திடும் தள்ளா முதியவர்
கொஞ்சமும் பிழை செய்யாப் பிராணிகள்
மால் பிடித்தவ ராலே மடிகையில்
மண்ணிலே அறம் எங்கே தழைக்குது.

உயிரிழந்தவர்க் காக அழுவமா
உடைமை விட்டவர்க் காக அழுவமா
பயிரிழந்தவர்க் காக அழுவமா
பதியிழந்தவர்க் காக அழுவமா
கதியிழந்தவர்க் காக அழுவமா
கைதியானவர்க் காக அழுவமா
சதி புரிபவர் எக்காளம் கொள்கையில்
தருமமே உனை எண்ணி அழுவமா.

எங்கள் மாணவர் கல்வி யிழப்பதா
எங்கள் நாடு கலையை இழப்பதா
எங்கள் தாயர் தன்மான மிழப்பதா
எங்கள் மக்கள் தம்செல்வ மிழப்பதா
எங்கள் சந்ததி வாழ்வை யிழப்பதா
எங்கள் பண்புபண் பாடு குலைவதா
எங்களின் எதிர்காலம் சிதைவதா
ஈடிலா அறம் வெற்றியை நல்குமா.

**காரை செ. சுந்தரம்பிள்ளை**

(யாழ் கம்பன் விழாவில் அரங்கேறியது)

# மறுமலர்ச்சியாளருள் ஒரு முற்போக்காளர்

**மறுமலர்ச்சிக்காலக் கடிதங்கள் (3)**

**மயிலங்கூடலூர் பி. நடராசன்**

யாழ்ப்பாணம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்க முன்னோடிகளுள் அ.ந. கந்தசாமியும் ஒருவர். அவருடைய மறுமலர்ச்சி நோக்குப் பரந்துவிரிந்தது. அவர் பொது உடைமைக் கட்சியின் முழுநேர உழைப்பாளராகப் பணியாற்றினார் என்பர். ஆனால் இலக்கியத்தில் அவர் இறுதி வரை மறுமலர்ச்சியாளராகவே விளங்கினார். பழமையிற் காலூன்றி நின்று புதுமையை உருவாக்குவதே அவரது கொள்கையாக இருந்தது. இதனால் தான் அவர் மறுமலர்ச்சியாளருள் முற்போக்காளராகவும் முற்போக்காளருள் மறுமலர்ச்சியாளராகவும் திகழ்ந்தார். மறுமலர்ச்சிபற்றிய அவரது கருத்தை அவரது பின்வரும் கூற்றுப் புலப்படுத்துகிறது.

''இன்று தமிழ்நாட்டிலே, நம் இன்பத்தமிழ் மொழியிலேஒருமறுமலர்ச்சி யுகம் நடந்துகொண்டிருக்கிறதென்று சொன்னால் அதில் தவறில்லை. நாவலர் காலத்தில் தொடங்கிய மறுமலர்ச்சித் தூறல் பின்னால் பாரதி காலத்தில் இடிமுழக்கத்தோடு கூடிய பெருமழையாயிற்று. இம்மழை இன்றும் இடையிடையே பெய்கிறது. ஓய்வற்ற இலக்கிய முயற்சியும் புது நூல் வளர்ச்சியும் இலக்கிய மாநாடுகளும் பழமை வேட்டலும் புதுமை நாடலும் இம்மறுமலர்ச்சி யுகத்தின் பண்புகளாம். பழைய நூல்களிலுள்ள அரிய செல்வத்தை நாம் எல்லாம் துய்ப்பதற்கு வழிதேடிய உ. வே. சாமிநாதையர், உலகியல் விளக்கம் பாடிய பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார், தமிழ்த்தென்றல் திரு வி. கவின்சுவைமிக்க செந்தமிழ், பாரதியாரின் கவிதா முழக்கம், கல்கியின் சிறந்த நவீனங்கள், இனிமை வாய்ந்த தேசிகவிநாயகனின் தெவிட்டாத பாடல்கள், புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் இடிமுழக்கக் கவிகள்- இவை யாவும் இம்மறுமலர்ச்சியின் ஒவ்வோர் கோணத்தை நமக்குக் காட்டுகின்றன''



அ. ந. கந்தசாமி

1940களில்மறுமலர்ச்சியின் பிதாமகராக விளங்கிய அ.ந க. 1950களில் முற்போக்கின் பிதாமகராகப் போற்றப்பட்டார். 1940 களிலும் 1950களிலும் மட்டுமல்ல 1960களிலும் அ. ந. க. மறுமலர்ச்சியாளராகவே விளங்கினார். 1967இல் வெளிவந்த மனக்கண் தொடர்நவீனமும் அதற்கு அவர் எழுதிய முடிவுரையும் 1960களில் அவரது இலக்கியக் கோட்பாடு மறுமலர்ச்சிச் சார்புடையதாக இருந்தது என்பதற்குச் சான்றாகும்.

1943ஆம் ஆண்டு உருவாகிய மறுமலர்ச்சிச் சங்கம் ஓராண்டுக்குள் தமிழியல் துறைசார்ந்த பல சாதனைகளை நிலைநாட்டியது. இவ்வாண்டில் அ. ந. க. துணைச் செயலாளராக இருந்தார். ''வெளியூர்செல்ல இருப்பதால் பதவியிலிருந்து ஓய்வுபெற விரும்புகிறேன்'' என 27.2.1944இல் அ.ந.க. எழுதினார். எனினும், சங்கம் அவரது விருப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

கொழும்பு அன்புமார்க்க சங்கத்திலிருந்து 20.9,1944இல் அ. ந. க. ஒரு கடிதம் எழுதினார். அதில் மறுமலர்ச்சிச் சங்கத்தின் ஓராண்டுச் சாதனைகளை நிரற்படுத்தி எழுதியுள்ளார்.

அன்புடையீர்,

சங்கத்திற்கென நல்வாழ்த்துக்கள். சென்ற ஆண்டில் சங்கம் பலப்பல வகையில் மொழிக்கும் நாட்டிற்கும் நற்றொண்டாற்றியது. மறுமலர்ச்சி ஆர்வமுள்ள பலரையும் ஒன்றுகூட்டி ஓர் குடும்பமாக்கியது. யாழ்ப்பாணத்தில் மறு (6ஆம் பக்கம் பார்க்க)

# கருணை உள்ளம் படைத்த வில்மா அன்னைக்குச் சாயி பாபா அளித்த தரிசனம்

வில்மா அம்மையார் கருணை உள்ளம் படைத்தவர். இவர் இயற்கையாகவே மற்றவர்களிடம் அன்பும் அனுதாபமும் உள்ளவர். அதனால்தானோ என்னவோ அவர் அமெரிக்காவில் வசித்து வந்த வாசஸ்தலம் ''கருணை இல்லம்'' என்று அழைக்கப்பட்டது.

அங்கு வசித்தவர்களோ -ஆதரவு அற்றுத் தங்கள் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட முதியோர்கள், தங்கள் சக்தியால் நடமாட முடியாத முடங்கள் – கண் இழந்தவர்கள், - முக்கியமாகத் தாய்முகம்பாரா பிஞ்சு உள்ளங்கள்.

> ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் விலாசமே தெரியாத தன்னைத் தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்திப் பின்பு பல சிரமங்களை எல்லாம் வெகு இலகுவாகக் களைந்து தன்விருப்பத்தைப்பூர்த்தி செய்யும் பொருட்டு பிரசாந்தி நிலையத்தின் முன் நிறுத்தி வைத்துள்ள சாயீசனைத் தரிசிக்க வில்மாவின் கண்கள் ஏங்கித் தவித்தன.

270க்கு மேற்பட்ட சிறார்களுக்கு அபயமளித்து, பராமரித்து, வளர்த்து, அறிவூட்டி, நல்லொழுக்கத்துடன் வெளியேறச் செய்தாள் இந்த மங்கை நல்லாள்.

வில்மா இவர்கள் அனைவருக்கும் உடன் பிறந்த சகோதரியாகவும் 'ஊனை வருத்திடும் நோய்வரின் உற்ற தாதியாகவும், கவலை எய்திடும் போதினில் இதஞ் சொல்லும் நண்டனாகவும்'' எலலாவற்றிற்கும் மேலாக பால் மணம் மாறாப் பச்சிளம் பாலகருக்குத்தாய்மையை அள்ளி ஊட்டும் தாயாகவும் விளங்கினாள்.

நலிவுற்றோரைப் பொலிவுறச் செய்வதே தன் தலையாய கடமையென்று கருதினாள்.

பதிலாக அங்குள்ள நொய்ந்தவர் காட்டும் இன்முகம், இன்சொல், குழந்தைகளின் சீலத்திருமுகம், அவர்கள் உதிரும் மோகனப்புன்னகை என்பன வில்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்தின.

போர்ட்லண்ட் நகருக்கு அப்பால் பிரசித்தியடைந்திராத கருணை இல்ல நடவடிக்கைகளைப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சாயீசன் அறிந்திருந்தார். பலனைக் கருதாது பற்றற்ற கடமை செய்யும் இந்த நல்லாளுக்கு ஒரு செய்தி அனுப்பி வைத்தார் பகவான்.

அவர் செய்தி அனுப்பிய விதமும் விந்தையானது. வேறு யாரால் தான் இந்த முறையைக் கையாளக் கூடும்? ஏன் அவ்வாறு அனுப்பினார் என்பதும் அவர் ஒருவருக்குத் தான் விளங்கும்!

வில்மாவிற்குத்தொலைபேசித் தொடர்பு ஒன்று வந்தது. அது மிகவும் நீண்ட தூரத்திலுள்ள இடத்திலிருந்து வந்ததாகத் தென்பட்டது. மறு பக்கத்திலிருந்த ஒரு பெண்ணின் குரல்.

''கலாநிதி புறங்கி, சாயிபாபாவைச் சந்திப்பதற்காக இந்திராதேவியின் தலைமையில் இந்தியா செல்லும் குழுவில் உங்கள் பெயர் பதியப்பட்டுள்ளது. உங்கள் பிரயாணச் செலவு 2000 டொலர்களைத் தயவு செய்து உடன் அனுப்பி வைக்கவும்''

வில்மா அதற்கு'இதில் ஏதோ பிழை நடந்திருக்கிறது. இந்தியா போகும் உத்தேசம் எனக்கில்லை. இந்தச் சாயிபாபா என்பவர் யார்?''

தொலைபேசி இணைப்பு உடன் துண்டிக்கப்பட்டது. தொலைபேசியில் கதைத்தவரின் விபரம் சொல்லப்படவில்லை.

''இது ஒரு விசித்திரமான செய்தியாய் இருக்கிறது. என்னுடன் கதைத்த நபர் என்னைக்



சாயிபாபா

கலாநிதி என்று அல்லவோ விளித்தார். எனக்கு சர்வகலாசாலைகளோ அல்லது வேறு ஸ்தாபனங்களோ கலாநிதிப்பட்டம் அளிக்கவில்லையே!''

இந்திரா தேவியைப் [illegible]

அறிந்திருந்தார் இந்திரா தேவி யோகாசனம். கற்றுக் கொடுக்கும் பிரபல ஆசிரியை. யோகமுறைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக உலக நாடுகளுக்கு அடிக்கடி சென்று வருவார். சாயிபாபாவைப் பற்றி வில்மா ஒன்றும் அறிந்திருக்கவில்லை ஆகையால் பாபாவைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.

கௌவட் மெபெற் (Howard Murphet) என்னும் அவுஸ்ரேலியர் எழுதிய ''சாயிபாபா - அற்புத மனிதர்'' என்னும் நூல் வில்மா விற்குக் கிடைத்தது. அந்தப்புத்தகத்தை வாசிக்க, வாசிக்க இந்தியாவிற்குச் சென்று இந்த அற்புத மனிதரைச் சந்திக்க வேண்டுமென்ற தாகம் ஏற்பட்டது.

தொலைபேசித் தொடர்பு ஏற்பட்டு ஒரு சில நாட்கள் சென்றன. எதிர்பாராத விதமாக வில்மாவின் [illegible] சேவையைப் பாராட்டு [illegible] அரசாங்கம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்தது. இதனால் வில்மா, பாபாவின் மேல் வைத்த நம்பிக்கை மேன் மேலும் வளர்ந்தது.

இந்தியா சென்று பாபாவைத் தரிசிக்க நிறைய ஆர்வம் ஏற்படத் தொடங்கிற்று. ஆனால் சில தடைகள் அவள் முன்னின்றன. போய் வருவதற்குப் போதிய பணம் இல்லமை, தன் பொறுப்புகளை ஏற்பதற்கு தகுதியும், போதிய அனுபவமுள்ளோர் கருணை இல்லத்தில் இல்லாமை.

**-- சத்தியா --**

தொலைபேசியில் அன்று தீர்க்கதரிசனமாக இரண்டு விஷயங்கள் வெளியிடப்பட்டன. ஒன்று வில்மா கனவிலும் எதிர்பாராத கௌரவப்பட்டம். இது நிரூபிக்கப்பட்டு விட்டது.

மற்றது இந்த மாமன்னனை இந்தியா சென்று நேரே தரிசிப்பது. அதுவும் நடந்து தீருமென்ற பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. எதற்கும் இவை பாபாவில் தான் நடந்ததென்பதற்குத் தனக்குச் சந்தேகமற்ற மிகவும் தெளிவான ஒரு அடையாளம் காட்டும்படி மனதில் பாபாவை வேண்டினாள்.

அத்துடன் அவள் இந்தியா செல்வதற்கு அவளை எதிர்நோக்கும் தடைகளையும் நீக்க வேண்டுமென்றும் மற்றுமொரு வேண்டுகோள் விடுத்தார்.

### மோதிர அன்பளிப்பு

வில்மா விசித்திரமான பழக்கத்திற்கு ஆளாகியிருந்தாள். விரல்கள் நிறைய மோதிரங்களை அணிந்து அவைகளின் அழகை ரசிப்பது. அவளின் பொழுது போக்கு.

சிகிச்சை இல்லத்தில் நோயாளிகளையும், குழந்தைகளையும் பராமரிக்கும் போது மோதிரங்களால் தடைகள் ஏற்படும் என்பதால், அவைகளை விரல்களினின்றும் அகற்றி ஒரு சிறு தோற்பையில் வைத்துக்கொள்வாள். தோற்பை எப்பொழுதும் தன் மேல் அங்கியின் உறையில் இருக்கும். சௌகரியம் ஏற்படும்போது மோதிரங்களை அணிந்து கொள்வாள்.

இந்த மோதிரங்களில் விலையில் மிகவும் குறைந்த, சாதாரண நீலக் கண்ணாடிக் கல் பதித்த மோதிரமே, வில்மாவின் மதிப்பையும், கவனத்தையும், கவர்ந்ததாக இருந்தது. கருணை இல்லத்தில் வளர்ந்து, பெரியவனாகி, வெளியேறி, நல்லொழுக்கத்துடன் வாழும் நல்லவனான ஒருவனால் நத்தார் பரிசாக அன்னை வில்மாவிற்கு வழங்கப்பட்டது அந்த மோதிரம். ஒரு நாள் வில்மா தன் சினேகிதியுடன் பேசும் படம் பார்க்கச் சென்றாள். ''வலது குறைந்தோரைப் பராமரிக்கும் முறைகள்'' பற்றிய படம் அது. இந்தப் படத்தை வில்மா முன்பே பார்த்திருந்தாள். அதனால் படத்தில் மனம் நாடவில்லை.

விரல்களில் மோதிரங்களை அணியாமலிருப்பதை அப்பொழுது உணர்ந்தாள். தன்தோல் பையை எடுத்து பக்கத்தில் காலியாக உள்ள ஆசனத்தில் வைத்து மோதிரங்களை. ஒவ்வொன்றாக அணிந்தாள்.

தனது மதிப்பிற்கும், பெருமைக்குமுரிய நீலக் கண்ணாடிக் கல் மோதிரம் பையுள் காணப்படவில்லை. (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் வீரர் சதா

சதாசிவம் கொலை வழக்குக் கட்டுரை தொடர்பாக சில தகவல்களைத் தர விரும்புகின்றேன்.

கிரிக்கெட் உலகில் சதாசிவம் ஓர் அசகாய சூரன். சர்வதேச கிரிக்கெட் உலகில் நன்கு போற்றப்படும் மேற்கிந்திய வீரர்களினுலேயே பெரிதும் மதிக்கப்பட்டவர் அவர்.

சதாசிவம் விளக்கமறியலில் இருந்த சமயம், இலங்கைக்கு வந்த மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்கள், தமது மரியாதையைத் திரு. சதாசிவத்திற்குச் செலுத்துவதற்காக விளக்கமறியல் சிறைச்சாலைக்குச் சென்றார்கள் என்றால் அவரின் பெருமையை வாசகர்கள் அறிந்து கொள்ள முடியும்.

'கோல்ப்' விளையாட்டிலும் அவர் ஒரு திறமைசாலி.

சமூகத்துடன் இணைந்து நடந்தவர் அவர்.

அவரது வாழ்க்கை முறையும், நாசூக்கில்லாத நடத்தையும் — முக்கியமாக சட்டம், ஒழுங்கு அமுல் நடத்தும் அதிகாரிகளோடு அவர் மோதிய விதம்— அவருக்குச் சில மகிழ்வற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த அசகாயசூரனுடன் மோதுவதற்கு வழியற்றிருந்த இந்த அதிகாரிகள் திருமதி சதாசிவத்தின் கொலையைத் தமக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டனர்.

'சதா'வை மாட்டுவதற்காகத் தமது சாதுரியம் முழுவதையும் திரட்டிச் செயற்பட்டனர்.

வில்லியம் கைதான போது அவனை ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அளிக்கக் கட்டாயப்படுத்தி, அவனை அரச தரப்பு சாட்சியாக்கித் தமக்குச் சாதகமாக அவனைப் பயன்படுத்திக் கொண்டனர்.

**சதாசிவம் கொலைவழக்குத் தொடர் தவிர்க்க முடியாத காரணமாக இவ்வாரம் வெளியிட முடியவில்லை. அடுத்த வாரம் வெளிவரும். வாசகர் ஒருவர் எழுதிய கடிதம் இங்கு வெளியாகிறது.**

## சதாசிவம் கொலை வழக்கு

மற்றொரு விடயம் இந்தக் கட்டுரைத் தொடரில் கூறப்பட்டதுபோல வில்லியம் மலைநாட்டில் கைது செய்யப்படவில்லை. மாத்தறையில் கைதுசெய்யப்பட்டான்.

இப்படிக்கு
விக்டர் எஸ். கிருபைராஜ்

# "அசலும் நகலும்" ஒரு கண்ணோட்டம்

அகில உலகங்களையும் ஆளுகின்ற அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதங்களுள் இறுதியானதே அல்குர்ஆனுகும். இவ்வுயர் வேதம் அருளப்பட்டு இற்றைக்கு சுமார் 1407 ஆண்டுகள் கடந்து சென்று விட்டனவாயினும் அதன் கருத்தாழமும் சொற்செறிவும் எம்மைக் கடந்து சென்று விடவில்லை - அதனை ஆராய்வோர் அதன் பக்கம் ஈர்க்கப்பட்டு அதன் செழுமையான அமைப்பில் கட்டுண்டு விடுவதை நாம் காண்கிறோம். இந்தவகையில் மௌலவி எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக் (எம்.ஏ) அவர்கள் எழுதிய 'வஹியின் ஒளியில் அசலும் நகலும்' என்னும் நூல் அல்குர்ஆனின் யதார்த்த ரீதியான விடயங்களை ஓரளவு விளக்கும் நூலாக அமைந்துள்ளது.

ஆசிரியர் இந்நூலை ஐம்பெரும் அத்தியாயங்களாக வகுத்துள்ளார் முதல் அத்தியாயம் வஹியின் ஒளியில் அசலும் நகலும் ஒரு ஒப்பீட்டாய்வு - இதில் அல்குர்ஆன் நாகரிகம், தக்வாவின் அவசியம், சிறந்த வியாபாரம், ஜிஹாதின் விளக்கம், வாழ்க்கைத் துணை போன்ற மற்றும் பல அம்சங்களை உள்ளடக்கியும்,

இரண்டாம் அத்தியாயம் மறைவான விடயங்கள் பற்றி அல்குர்ஆன் தரும் யதார்த்தக் கருத்துக்கள் - இதில் மேற்கத்தியப் பெண்ணின் ஏமாற்றம், பிறப்பின் இரகசியம், குழந்தை குழாயில் தரித்ததா? நாளை நடப்பது என்ன? போன்ற மற்றும் பல விடயங்களை உள்ளடக்கியதாகவும்,

மூன்றும் அத்தியாயம் அல்குர்ஆனின் பார்வையில் பெருமானுர் (ஸல்) அவர்களும் சுன்னுவும் பற்றியது. இதில் பெருமானுரை மறுப்பது அறியாமை, சுன்னு என்றால் என்ன? சுன்னுவும் ஹிக்மத்தும், இஸ்லாமிய தண்டனைகளில் சுன்னுவின் பங்கு போன்ற மற்றும் பலதையும் உள்ளடக்கியதாகவும்,


நான்காம் அத்தியாயம் இஸ்லாத்தின் கட்டளைகள் எளிதானவை. இதில் மதுவிலக்கும் அல்குர்ஆனும், இத்தாவுக்கான காரணங்கள், இஸ்லாத்தின் கட்டளைகள் சமயோசிதமானவை, நாளிக் மன்சூக், சமூக உறவாடல் தொழிலாளி முதலாளி உறவு, மூட நம்பிக்கைக்குச் சாவு மணி. இஜ்மசஃகியாஸ், போன்ற மற்றும் பலதையும் உள்ளடக்கியது.

ஐந்தாம் அத்தியாயம். மனிதன் யார்? அவன் பெறுமதியென்ன? என்பவை பற்றியெல்லாம் சுருக்கமாக அதே நேரத்தில் தெளிவாக எடுத்துக் காட்டுகின்ருர்.

ஆசிரியரின் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

ஆசிரியரின் இப்பணி மனித கோடிகள் பயன்பெற வழிவகுக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு. ★

நூல்: வஹியின் ஒளியில் அசலும் நகலும்.
ஆசிரியர்: மௌலவி எம். ஐ. அப்துர் ரஸ்ஸாக்
அறிமுகம்: மௌலவி எஸ். எச். கலீனுர் ரஹ்மான்.




# "இந்து நாகரிகம்" பயனுள்ள சஞ்சிகை

திரு க. சி. குலரத்தினம் அவர்கள் நாடறிந்த அறிஞர். தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றில் ஆற்றல் வாய்ந்தவர். சமஸ்கிருதமும் அறிந்தவர். அரசியல், புவியியல், வரலாறு, நாகரிகம், தத்துவம் முதலியவற்றில் நிரம்பிய அறிவுடையவர். இதன் காரணமாகப் 'பல்சலைப் புலவர்' என அறிஞர்களாற் போற்றப்படுபவர். அத்தகைய ஒருவரை ஆசிரியராகக் கொண்டு மாத சஞ்சிகை ஒன்று வெளிவரத் தொடங்கியிருக்கிறது. அதன் பெயர் 'இந்து நாகரிகம்'. முதலாவது இதழ் ஆனி மாதத்து.

''இந்து நாகரிகம்'', 'இந்துப் பண்பாடு'' என்ற தலைப்புக்களிலான கட்டுரைகள் இந்து நாகரிகத்தின் பொருத்தன்மைகளைச் சிறப்பம்சங்களை விளக்குவனவாக உள்ளன. அவை இரண்டும் மிகச்சிறிய கட்டுரைகள். ஆயின் மிகவும் ஆழமான விடயங்கள்.

இந்து நாகரிகப்பாடத்திட்டம் வேதகாலத்தை ஒரு பகுதியாகக்கொண்டது. வேதகாலக் கடவுளர் பற்றிய விளக்கங்கள், அக்கடவுளருக்குரிய வழிபாட்டு முறைகள், அவ்வக் கடவுளருக்குரிய சிறப்பம்சங்கள், வேதகால மக்களிடையே அக்கடவுளர் பெற்றுள்ள செல்வாக்குகள் முதலியன அப்பகுதியிற் சொல்லப்படும் விடயங்கள். இச்சஞ்சிகையில் வேதகாலக் கடவுளரைப் பற்றிய சில கருத்துக்கள் சிறு சிறு அளவுகளில் தரப்பட்டுள்ளன. 'தீக்கடவுள்', ''மித்திரன் என்னும் சூரிய பகவான்; 'வாயுதேவன்' முதலான தலைப்பிலானவை அவை.

இந்திய தத்துவங்கள் பற்றிய விஷயங்களும் சஞ்சிகையில் இடம் பெறுகின்றன. 'இந்திய மெய்ப் பொருளியல்' என்ற தலைப்பிற் கூறப்பட்ட விடயங்கள் இந்திய தத்துவங்கள் பற்றிய கட்டுரைகளுக்கு ஒரு 'முன்னுரை' போன்று அமைவன. தரிசனங்களைப் பற்றிய கட்டுரையில் இந்து நாகரிகத்தில் தரிசனங்கள் பெறும் முக்கியத்துவம், தரிசனம் என்ற சொல்லின் பொருள், அறுவகைத் தரிசனங்கள், அவற்றைத் தந்தோர் பெயர், அத்தரிசனங்களுக்கு எழுதப்பட்ட உரைகள், மொழிபெயர்ப்புகள் என்பவை பற்றிய விவரங்கள் உள.

''கோபுர தரிசனம்' 'துவார பாலகர்கள்', திரிசூலம்', 'அஸ்திர, தேவர்', 'சோடசோப உபசாரம்', 'சிவதீட்சை' முதலான தலைப்புக்களிற் சொல்லப்பட்ட விடயங்கள் பெரும்பாலும் ஆகம வழிபாடு சம்பந்தமானவை. சிவாகமங்களின் வழியில் வந்தவை பத்ததிகள், அவற்றைப்பற்றிய பல அரிய விடயங்கள் 'வினு விடை' வடிவிற் கூறப்பட்டுள்ளன.

இந்து நாகரிகக் கலைச்சொற்களாக விளங்குகின்ற வடசொற்கள் பலவற்றுக்குப் பொருள் தெரியாது இடர்ப்படுவோர் பலர். அத்தகையோருக்கு உதவக்கூடிய வகையிலே பல வடசொற்களைத் தொகுத்து அவற்றுக்குப் பொருள் எழுதப்பட்டுள்ளது. அகராதியமைப்பில் 'அ'கரத்தில் தொடங்கும் சொற்களுக்கு இந்த இதழ் பொருள் கூறுகின்றது. ஏனைய எழுத்துக்களில் தொடங்கும் சொற்களுக்குத் தொடர்ந்து வரும் இதழ்கள் பொருள் தரும் என நம்பலாம். இவ்வாறே இந்து மதத்திற் பயின்று வருகின்ற தொகைச் சொற்களுக்கும் விளக்கம் கூறப்பட்டுள்ளது.


பல அரிய விடயங்கள் மிகச் சிறு சிறு அளவுகளில் துணுக்குகள் போலத் தரப்பட்டுள்ளன. அவை மிகுந்த பயனுள்ள விசயங்கள். உதாரணத்திற்குச் சில:- பதினுறு பேறு, சப்த புரிகள், பஞ்சபூத மரங்கள், இலிங்கேஸ்வரர். ஊரும் பேரும்.

இந்து நாகரிக மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தைக் கடந்தும் பல விடங்களை அறியக்கூடிய வாய்ப்பு இச்சஞ்சிகை மூலம்கிட்டும். இந்த இதழ்போலவே தொடரும் இதழ்களும் பயன் மிக்கதாக அமையும் என நம்பலாம். ★

| | |
|---|---|
| மாதசஞ்சிகை: | இந்து நாகரிகம் |
| ஆசிரியர்: | க. சி. குலரத்தினம் |
| விலை: | ஐந்து ரூபா |
| அறிமுகம்: | சகரன் |

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 73




அனுப்புபவர் பெயர்:-
திரு/திருமதி/செல்வன்/செல்வி ....................

விலாசம்:- ....................

வயது:- ....................

ஒப்பம்:- ....................

### இடமிருந்து வலம்

1. போர்க்களத்தில் பிறந்த ஞானதத்துவம், 6. துண்டம், 7. காதணி, 8. கூறல், 9. திரளுதல், 11. தலையெழுத்து, 13. பாய். 14. சுகவாய்ப்பு, 17. வெந்நீரூற்ருல் புகழ்பெற்ற இடம், 18. மாட்சிமை, 19. கூட்டு மாறி நிற்கிறது, 21. வீட்டின் முன்னுல் இருப்பது, 22. இட்லிக்குச் சோடி.

### மேலிருந்து கீழ்

1. இதற்கு இப்போது தேவையில்லை. அதனுல் மூடப்படுகின்றது, 2. ஓர் உறுப்பு, 3. தழும்பு, 4. கீறுவதால் வருவது 5. இல், 7. வெற்றியைக் கோட்டை விட்டால், 8. வாதத்திறமை 10. நசி. 12, எருதின் ஏரி, 15. ஒரு கிரகம், 16. பிறர் பொருட்டு தன்னலம் துறக்கும் தன்மை, 17. கிருபை, 18. மாது. 20. சபை

### சொற்சிலம்பம் போட்டி இல. 71 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆதிபகவன், 6. விண், 7. சாம், 8. அணை, 9. மதிப்பு, 10 கவி, 11. கொம்(பு) 12. பொதி, 14 மாது, 16. குதித்தல், 19. சதி, 20. மிதிலை, 21. பாண்டு, 22 ஈர், 23. வினுவினை .

**மேலிருந்து கீழ்**

1. ஆவி, 2 திண்மம், 3. கசாப்பு, 4. வம்பு 5. துணைவி, 8. அகதி, 11. கொக்கு, 12. பொது, 13. கத்தி, 14. மால், 15. வாதிடு 17. திமிர், 18. தலைவி 19. சண்டை 21. பாவி.

### சொற்சிலம்பம் போட்டி இல. 71

**பரிசு பெற்றவர்கள் விவரம்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | திரு. க. சிவானந்தம் 'சிவபதி' பன்னுலை, தெல்லிப்பளை. |
| இரண்டாம் பரிசு: | செல்வி க. சிவநேசன் வைத்தியர் வளவு, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| மூன்றும் பரிசு: | திருமதி J. M. தர்மதாஸ் 'உதயகிரி' புனித செபஸ்தியார் வீதி, மன்னுர். |

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

# பிள்ளைகளின் உணர்ச்சிகளுக்கு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கூட நேரமில்லாத பல பெற்ருேர்களுக்கு குழந்தைகளை விமர்சிக்க மட்டும் ஏகப்பட்ட அதிக நேரம் எப்பொழுதும் கிடைக்கும்! பெரும்பாலான குழந்தைகளுக்கு, தங்களது பெற்ருேர் திட்டும் பொழுது பதில் கூறத் தெரிவதில்லை. இவர்கள், தங்கள் பெற்ருேர், அநியாயமாவும், மற்றவர்களின் முன் தலை குனிவு ஏற்படும் படியும் தங்களை விமர்சிப்பதாகக் குறை கூறுகிருர்கள்.

உதாரணமாக,

''உனக்கு எப்பவும் மறதி ஜாஸ்தி''

''ஒரு காரியமும் உருப்படியாகச் செய்ய உனக்குத்துப்பில்லை'' போன்ற விமர்சனங்கள் குழந்தைகளை மிகவும் புண்படுத்துகின்றன.

எல்லோரும் எப்பொழுதும் குறையுள்ளவர்களாகவே இருப்பதில்லை. அதே போல், குறையில்லாத மனிதனும் இல்லை.

குழந்தைகள் தங்களது சம வயது தோழர்கள் முன், பெற்ருேரால் விமர்சிக்கப்படுவதை அடியோடு வெறுக்கிருர்.

எப்பொழுதும் குழந்தைகளிடம் குறைகளையே கண்டு பிடிக்காமல், அவர்களிடமிருக்கும் நல்ல குணங்களையும், திறமைகளையும் வெளிக்கொணர முயற்சி செய்யுங்கள். அது குழந்தைகளை, எதிர்காலத்தில் தன்னம்பிக்கை உள்ளவர்களாகத் திகழச் செய்யும்.

திருத்தப்பட வேண்டிய குறைகள் இருந்தால், எல்லோர் முன்னிலையிலும் அவர்களைக் கண்டிக்காதீர்கள். தனியே கூப்பிட்டு, அவர்களது சுயமரியாதையை பாதிக்காத வண்ணம், அவர்களது தவறுகளை எடுத்துக் கூறுங்கள்.

**நாளை நல்ல பொழுதாகத் துவக்கவும்**

நீங்கள் தினமும் காலையில் குழந்தைகளுடன் செலவழிக்கும் நேரம் அவர்களை நாள் முழுவதும் பாதிக்கிறது.

குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் புறப்படும் முன், பெற்ருேர்கள் அவர்களிடம் கூறும் கடுமையான வார்த்தைகள் அவர்களை நாள் முழுவதும் பாதிப்பதோடு, பள்ளிக்கூடத்தில் சரிவர பாடங்களைக் கவனிக்க முடியாமல் செய்கிறது.

குழந்தைகள் பள்ளிக்கூடம் கிளம்பும் முன், ஒரு சிறு அணைப்பு, அல்லது முத்தம் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் பேசி வழியனுப்பிவைக்கவும். இந்த மாதிரியான நல்ல துவக்கம் உங்கள் குழந்தைகள் நாள் முழுவதும் தன்னம்பிக்கையுடன் திகழ பேருதவிபுரிகிறது.

நன்றி: சுமங்கலி

# மறுமலர்ச்சியாளருள் ஒரு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மலர்ச்சிக் கதிரவனின் ஜோதியைப் பரப்பியது.

பாரதிக்கும் நாவலனுக்கும் பெருவிழா எடுத்தது. விபுலானந்த அறிஞனுக்கும் நவயுக எழுத்தாளர் சக்திதாசனுக்கும் வரவேற்பளித்தது.

பிறந்த உடனேயே, ஓராட்டைப் பிராயம் பூர்த்தியாகுமுன்னரே இத்தனை காரியம்செய்த சங்கம் வேறில்லை. அரசியல் இலக்கியச் சங்கங்கள் எவையுமே இலங்கையின் பழமூதாதையான கும்பகர்ணன் அடிச்சுவட்டைப் பின்தொடரும் யாழ்ப்பாணத்தில் எங்கள் சங்கம் புதுமை; விழிப்பின் பெருமையை ஆபரணமாகப் பூண்டது. அது முன்னை முச்சங்கங்கள் பரம்பரையில் வந்தபோதிலும் அவைபோல் அழியாமல் காலனைவென்று தமிழ்ஜாதி உலகில் உள்ளவரையிலும் ஒளிவீசுவதாக.

சென்ற ஆண்டுப் பெருந்தொண்டுகளிலொன்று பல தமிழறிஞர்கள் கொள்கையையும் நன்கு கூட்டித் தொகுத்தமையாகும். இரண்டாமண்டில் அது ஓர் தொகை நூலாக அச்சேறி உலவுவதாக. இது என் ஆசை.

சென்ற ஆண்டு மகத்தான முதலாண்டு சோதனையாண்டு, ஐந்தாம்படைக்காரர் தம் சூழ்ச்சி வலிமையை உபயோகித்து அது சாயாமை கண்டு ''அன்று விட்டேன் கொன்றையடி' என்ருேட்டமெடுத்த ஆண்டு. எனவே, அது வெற்றியாண்டாகும்.

இவ்வெற்றி சாத்தியமாகும் பொருட்டுத் தொண்டாற்றிய தலைவர்கள் அ. செ. முருகானந்தம், சண்முகம் (துணைத்தலைவர்) காரியதரிசிகள் தி. ச. வரதராசன், ச. ப. சர்மா, க. இ. சரவணமுத்து (துணைச் செயலாளர்), தனுதிகாரி ரேவதி குப்புஸ்வாமி எல்லாரும் உண்மை மறுமலர்ச்சியாளர்கள், இதய நன்றிக்காளானவர்கள். அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் உண்டாகி மேன்மேலும் தொண்டாற்ற உதவுவதாக.

வெற்றி எட்டுத்திக்கு மதிரக் கொட்டுமுரசே மலர்ச்சி நறுமணம் திசையெங்கும் மணக்கட்டும், தமிழன் இதய வெழுச்சி இகமெங்கும் பரவட்டும் வாழ்க மறுமலர்ச்சி. வாழ்க சங்கம். வாழ்க தமிழ்.

மறுமலர்ச்சிச் சங்கம் என்ற தமது அன்புக்குரிய குழந்தையின் ஓராண்டுவளர்ச்சியில் மகிழும் தந்தையாக அ. ந. அவர்களை இக்கடிதத்தில் காண்கின்றோம்.

# சமாதான, இனப்பிரச்சினை தீர்வு...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

இன்று நனவாக்கி விட்டோம்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்— என்று பாரதி பாடினுர். நாம் இன்று இலங்கையுடன் நல்லுறவுப்பாலம் ஒன்றை அமைத்திருக்கின்ருேம்.

பௌத்தம் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டு. தமிழர் மூலமும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டு.

இலங்கையில் உள்ள பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனமும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளன.

இந்து மதத்தை பௌத்தம் என்றுமே நிராகரிக்கவில்லை என்று ... இந்துமதமே பௌத்தத்தின் அடிப்படை.

புத்துயிரையும் புது விளக்கத்தையும் இந்து மதத்துக்குக் கொடுத்தது பௌத்தம்.

இலங்கைத் தமிழர்களில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களும் உள்ளனர்.

''நான் இஸ்லாத்தை சமாதானத்தை விரும்பும் சமயமாகக் கருதுகின்றேன்''— இப்படி காந்திஜி சொன்னுர்.

இந்த ஒப்பந்தம் அமைதியைக் கொண்டு வந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் முறிய வேண்டும் என்று பல சக்திகள் விரும்புகின்றன.

இந்த ஒப்பந்தம் காரணமாக வெளியேற வேண்டிய சக்திகளே இப்படி விரும்புகின்றன.

நடந்த வன்செயல்களில் பயன்பெற்று வந்த சக்திகளும் இந்த ஒப்பந்தம் முறிய வேண்டும் என்றே விரும்புகின்றன.

இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் இந்திய, இலங்கை அரசுகள் பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் ஈடுபடவேண்டும்.

இரு தரப்புத் தீவிரவாதிகளும் ஒப்பந்தத்தை முறியடிக்க விரும்பும் சக்திகளின் கைப்பாவைகளாக மாற நாம் அனுமதிக்கக் கூடாது.

இந்த சமாதானத்தை முறியடிக்கக்கூடிய நடவடிக்கைகளை நாம் அனுமதிக்கக்கூடாது.

பழி வாங்கும் நடவடிக்கையைத் தூண்டக்கூடியதான ஆத்திரமூட்டும் நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

நீண்டகாலம் பயனளிக்கக்கூடிய தீர்வைக் காண இனி ஜனநாயக முறைகளைக் கையாள வேண்டும்.

இந்த ஒப்பந்தம் உருவாக பலர் உழைத்தனர்.

1983 ஜூலையில் அன்னை இந்திரா இலங்கைக்கு உதவ முன்வந்தார். அன்று தொட்டு இந்திய தரப்பில் பலர் அமைதித் தீர்வு காண உழைத்தனர்.

இச்சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒப்பந்தம் உருவான இத்தருணத்தில் அவர்கள் அனைவருக்கும் தனித்தனியே நான் நன்றி கூறுகின்றேன்.

இலங்கையில் தமிழர் இன்னலுக்குள்ளான போது மிகுந்த வீரத்துடன் சகிப்புத்தன்மை காட்டிய தமிழக மக்களுக்கு விசேட பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தியாவின் 78கோடி மக்கள் சார்பாக தமிழக மக்களைப் பாராட்டுகின்றேன்.

**முக்கிய கட்டம்**

இந்தியா விரைவில் 40 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தைக் கொண்டாடவுள்ளது.

இத்தருணத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் முக்கிய கட்டமாக அமைகின்றது.

இந்த நூற்ருண்டில் இந்த உலகிலே இது போன்ற ஓர் ஒப்பந்தம் உருவானதில்லை.

நல்ல அயல் உறவு, கூட்டு வாழ்வு, அணிசேராத்தன்மை ஆகியவற்றை நிரூபிப்பதாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் காந்திஜி, நேருஜி, இந்திரா ஆகியோரின் தார்மீக சிந்தனைகளை செயலுருவில் கொண்டு வந்ததாக அமைந்து உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தம், சட்ட-ஒழுங்குப் பராமரிப்பு

# இனி இந்தியத் துருப்புக்களின் பணிகள்

கேள்வி: பிரபாகரன் வந்தாரா?

ஆட்டிகல: அவர் இன்று வரவில்லை.

கேள்வி: பிரபாகரன் ஆயுதத்தைக் கையளித்தாரா?

ஆட்டிகல: அவர் ஆயுதத்தை ஒப்படைக்கவில்லை. அவரும் ஆயுதத்தை ஒப்படைக்கத்தான் வேண்டும்.

கேள்வி: எல்லா ஆயுதங்களையும் ஒப்படைப்பார்களா?

ஆட்டிகல; அப்படித்தான் நம்புகின்றோம்.

கேள்வி: யுத்த நிறுத்தம் திருப்திகரமானதாக இருக்கின்றதா?

ஆட்டிகல: கடந்த ஒரு வார காலத்தில் ஒரு சம்பவமும் இடம்பெறவில்லை.

இந்திய மேஜர் ஜெனரல்: இலங்கை அரசு, இராணுவம் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பூரணமாக அமுல்நடத்த அனைவரும் ஆதரவு தருகின்றனர்.

இன்று புலிகள் ஆயுதங்களை சம்பிரதாய பூர்வமாக ஒப்படைத்தனர். ஆயுதங்கள் ஒப்படைப்பது இன்னும் நான்கு தினங்களுக்குள் முடிவடையும் என்று நான் நம்புகின்றேன்.

அமைதி நிலவும், இரத்தம் ஓடாது-என்று மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

இலங்கை மீண்டும் ஒரு சொர்க்கத் தீவாக மாறும்.

கேள்வி: எவ்வளவு ஆயுதங்கள் இன்று ஒப்படைக்கப்பட்டன?

சிங்; 150 ஆயுதங்கள் இன்று ஒப்படைக்கப்பட்டன. எல்லாரக ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டன.

கேள்வி; யாழ் குடாநாட்டில் ஆயுதங்களை ஒப்படைக்க எத்தனை முகாம்கள் உள்ளன?

சிங்: 9,10 முகாம்கள் உள்ளன.

கேள்வி: ஏன் இந்தியக் கப்பலில் துருப்புக்கள் திருமலைக்கு அனுப்பப்பட்டன?

சிங்: அங்கு இறங்கும் வசதி இருப்பதால்.

கேள்வி: எவ்வளவு துருப்புக்கள் இலங்கைக்கு வந்துள்ளன?

சிங்: சுமார்மூவாயிரம் துருப்புக்கள்.

கேள்வி: இன்னும் எவ்வளவு துருப்புக்கள் வரும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

சிங்: இன்னும் 1,500 துருப்புக்கள் வரலாம்.

கேள்வி: உள்ளூர் நிர்வாகத்தில் இந்தியா ஒத்துழைப்பு வழங்குமா?

சிங்: சட்டம், ஒழுங்கு பராமரிப்பதில் நாம் ஈடுபடுவோம்,

யுத்த நிறுத்தத்தை சரிவரக் கடைப்பிடிக்க உத்தரவாதம் அளிப்போம்.

யுத்தநிறுத்தமீறல் இடம்பெறுமல் பார்த்துக்கொள்வோம்.

> ஆயுதக் கையளிப்பு வைபவத்தின் போது வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்தியாளர்களுக்கு ஜெனரல் சேபால ஆட்டிகலவும் இந்திய மேஜர் ஜெனரல் ஹரிக்கிர்சிங்கும் பேட்டி அளித்தனர்.

மக்களின் பாதுகாப்புக்காக நாம் இங்கு இருக்கின்றோம்.

சமாதானத்தை நிலைநாட்டுவோம்.

கேள்வி: பிரபாகரனைக் காலையில் சந்தித்துஎன்ன பேசினீர்கள்?

சிங்: ஆயுதங்களை ஒப்படைப்பதுபற்றிய வழிமுறைகளை அவருடன் ஆராய்ந்தோம்.

கேள்வி: எல்லா ஆயுதங்களும் ஒப்படைக்கப்படுமா?

சிங்: அப்படியே நம்புகின்றோம்.

கேள்வி: இன்று ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்கள் மட்டுமா?

சிங்; இன்னும் அவர்களிடம் உண்டு.

கேள்வி: பெரிய ஆயுதங்களும் அவர்களிடம் உண்டா?

சிங்: சம்பிரதாயபூர்வமான ஒப்படைப்பு வைபவம் இன்று நடந்தது. இனி அவர்களிடம் இருக்கும் ஆயுதங்களின் பட்டியல் ஒன்றைப் பெறுவோம். பின்னர் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவோம்.

கேள்வி: எவ்வளவு காலத்துக்கு இந்தியத் துருப்புக்கள் இங்கு இருக்கும்?

சிங்: அவர்கள் விரும்பும் வரை.

கேள்வி: திரு. ஜெயவர்த்தன விரும்பும் வரையா?

சிங்: ஆம்.

கேள்வி: இன்றைய நிகழ்ச்சியில் யோகி ஏன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை? மௌனமாக இருந்தாரே!

சிங்: என்னையா கேட்கிறீர்? நீர் ஒரு பத்திரிகையாளர். அவர் ஏன் பேசவில்லை என்று நான் எப்படிக்கூற முடியும்?

அவர் பேசத் தயாராகத்தான் இருந்தார். அவர் ஒரு தலைவர். அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது எங்கள் பொறுப்பு. அவர் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் எல்லாரும் பாதுகாப்பாக உள்ளீர்கள். அமெரிக்க மக்கள் அதிபர் றேகனைப் பாதுகாக்கின்றீர்கள்.

கேள்வி: ஆயுதங்கள் ஒப்படைப்பது தொடர்ந்து இடம் பெறுமா?

சிங்: ஒன்பது மாவட்டங்களில் ஆயுதங்கள் ஒப்படைப்பது இடம்பெறும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இதற்காக நாம் செல்வோம். நான்கு தினங்கள் இவை இடம் பெறும்.

கேள்வி: எப்படியான ஆயுதங்கள்?

சிங்: சொல்லி விட்டேனே. ஆயுதங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று கேட்கின்றீர்களா? (சிரிப்பு)

சிங்: நாம் இங்கு வந்த பின்னர் இங்கு வன்செயல் இடம்பெறவில்லை என்பதை நீங்கள் அவதானிக்கவில்லையா?

கேள்வி: வேறு என்ன பணிகளில் ஈடுபடுவீர்கள்?

சிங்: சட்டம்—ஒழுங்கு பராமரிப்பில.

கேள்வி: உள்ளூர்ப் பொலீஸ் பற்றி......

சிங்: அவர்களும் சேர்ந்து இயங்கலாம்.

கேள்வி: எவ்வளவு பேர் ஆயுதங்களை ஒப்படைப்பர் என்று கருதுகின்றீர்கள்?

சிங்: முழுப் பேரும். இலங்கை அரசு இரண்டாயிரம் போராளிகள் உள்ளனர் என்று கூறுகின்றது.

கேள்வி: போராளிகளைத் தேடிச்சென்று ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வீர்களா?

சிங். அப்படி வராது என்று நம்புகின்றேன். அவர்களை ஒப்படைக்கச் செய்வோம். அவர்கள் நன்றாக ஒத்துழைக்கின்றார்கள்.

கேள்வி: மற்றப் போராளி அமைப்புக்கள் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி......

சிங்: அவர்களும் ஒப்படைக்க வேண்டும்.

கேள்வி: இடைக்கால நிர்வாகம் எப்போது ஆரம்பிக்கும்?

சிங்: அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்து விட்டன.

கேள்வி: போராளிகளுக்கும் பொறுப்புக்கள் வழங்கப்படுமா?

சிங்: ஒப்பந்தத்தில் அதுவும் கூறப்பட்டுள்ளதே. நீங்கள் வாசிக்கவில்லையா?

கேள்வி: எவ்வளவு நாளைக்கு நீங்கள் இங்கு இருப்பீர்கள்?

சிங்: நாம் 'யுத்தக் (Battle ord r) கட்டளை' மீது வந்துள்ளோம். 'யுத்தத்துக்குப் போகும், படை வீரன், என்ற தயார் நிலையில் தான் நாம் இங்கு வந்துள்ளோம்.

கேள்வி: பீரங்கி வண்டிகளை ஏன் கொண்டு வந்திருக்கின்றீர்கள்?

சிங்: பாதுகாப்புக்கு

கேள்வி: இன்னும் பீரங்கி வண்டிகள் வருமா?

சிங்: அது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை.

கேள்வி: சென்னையில் சிறு போராளிக் குழுக்களைச் சேர்ந்த 75 பேர் தங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பதாகக் கூறப்படுகின்றதே. உண்மையா?

சிங்: அது பற்றி எனக்குத் தகவல் வரவில்லை.

கேள்வி: ஜெனரல், சில போராளித் தலைவர்கள் ஆயுதங்களை வைத்து இருக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று செய்தி ஒன்று வந்துள்ளதே; தங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்காக. இது சரியா?

சிங்: நான் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருடன் பேசினேன்.

அரசிடமிருந்து சட்ட பூர்வமான லைசென்ஸ் பெற்றவர்கள் மட்டுமே ஆயுதம் வைத்து இருக்க அனுமதிக்கப்படுவர்- என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

மக்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காகத் துவக்கு இருக்க தனது அரசு லைசென்ஸ் வழங்கும் என்றும் அவர் சொன்னார். லைசென்ஸ் பெறப்பட்ட ஆயுதங்களை மட்டுமே வைத்திருக்கமுடியும். ★

தொகுப்பு: சண். ஜோண்சன்

---

# புனித ஹஜ் பெருநாள்

# இஸ்லாம கூறும்கடமை

புனித ஹஜ் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகும். அறிவுடைய, பருவமெய்திய வசதி வாய்ப்புப் பெற்ற ஒவ்வொரு முஸ்லிம் ஆண், பெண் மீதும் வாழ்நாளில் ஒரு முறை இது கட்டாயக் கடமையாகும். இதனை மறுப்பவர் முஸ்லிமாக இருக்க முடியாது. இதனை நிறைவேற்றுவதில் காரணங் கூறி தப்பிக்க முடியாது.

சமூகம்

அது கடும் குற்றமாகும்.

ஹஜ் இஸ்லாத்தின் கூட்டு முறையிலான வணக்கம். அதனுள் எண்ணிறைந்த உலகியல் ஆன்மீகப் பயன்கள் உள்ளன. ஹஜ்ஜின் பிரதான அமலான துல் ஹஜ் பிறை 9ஆம் நாள் அரபாத் என்னும் பெருவெளியில் தங்குவதற்காக உலகின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் முஸ்லிம்கள் பயணம் மேற்கொண்டு திருமக்காவை வந்தடைகின்றார்கள். பிரதி வருடமும் பல லட்சம் மக்கள் அங்கு வந்து கூடுகின்றார்கள். இன்று முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள பெரு நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை ஹஜ்ஜுக்குச் செல்வோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது.

ஹஜ்ஜுக் கடமைக்காகச் செல்லும் முஸ்லிம்கள் காரணமாக இஸ்லாமிய உலகிலே ஒரு வித எழுச்சியும், ஜீவசக்தியும் பிறந்திடக் காணலாம். இது ''பைத்துல்லாஹ்'' என அழைக்கப்படும் ''கஃபா'' ஆலயத்தின் அற்புதங்களில் ஒன்றெனக் கூறுவது மிகையாகாது. இந்தச் சின்னஞ்சிறிய ஆன்மீக ஆலயம் பரந்து விரிந்த இப்பாருலகில் வாழும் பலகோடி முஸ்லிம்களை அன்பு; சகோதரத்துவம்; சமத்துவம் என்ற பாசக் கயிற்றால் பிணைத்து விடுகிறதென்றால், எப்பொழு



தாகிலும், எந்த மூலையிலாகிலும், ஒரு சலனம் பிறந்து விடுமாயின் அதன் அலை முழு சக்தியுடன் உலகம் முழுவதும் வியாபித்து விடுகின்றது.

ஒரு முஸ்லிம் ஹஜ்ஜின் போது உலகில்பேசப்படும் அத்தனை மொழிகளையும்

> இவ்வாரம் நிகழ்ந்த புனித ஹஜ்ஜுப் பெரு நாளை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகின்றது.

கேட்க முடிகின்றது. இவை யாவும் இஸ்லாம் வழங்கிய கூட்டு முறையிலான இந்த ஹஜ்ஜு எனும் வணக்கம் ஈந்த நன்கொடைகளாகும்.

அந்த அரபாத் பெருவெளியிலே அறிமுகமில்லாதவர்கள்; பல மொழி பேசுபவர்கள், பல்வேறு பழக்கவழக்கமுடையவர்கள், ஒரே வித உடை உடுத்தியவர்கள், பகலில் கடும் வெயிலிலும், இரவில் கடும் குளிரிலும், ஒரே விதமாக, ஒரே சீராக, தரப்பட்ட, சொல்லிய பிரகாரம் கட்டளைகளை, வழிபாடுகளை நிறைவேற்றும் போது, இந்த ஹஜ் கடமை விழுப்பம் பெறக் காண்கிறோம். ★

- அக்பர் ஜின்னா -

★

**நபி அவர்கள்**

நபிஅரேபியாமுழுவதும் அமைதி நிலைநாட்டப்பட்டிருந்தசூழ்நிலையில் ஹிஜ்ரி பத்தாவது ஆண்டு மக்கா சென்று ''ஹஜ்'' கடமையைச் செய்யத் தீர்மானித்தார். நபியவர்கள் ஹஜ் கடமை செய்யப்புறப்படுகிறார் என்ற செய்தியைக் கேட்டவுடன் மக்கள் சாரி சாரியாக மதினாவினுள் வர ஆரம்பித்தனர். சுமார் ஒரு லட்சத்து பதின்நான்காயிரம் வரையிலான மக்கள் நபியவர்களைத் தொடர்ந்து மக்கா நோக்கிப் பிரயாணமானார்கள். நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தில் இருந்து கொண்டு ''இறைவா! இதோ நான் உன் முன் சமுகமளித்து விட்டேன்! உனக்கு இணையாருமில்லை! உனக்கே சர்வ புகழும் உரியன. இதோ நான் உன் முன் சமுகமளித்து விட்டேன்''என்றார்.

- மு. நவாஸ்தீன்

---

## நல்லைக் கந்தன் பள்ளியெழுச்சி

பெருந்துயர் விளைந்தது நீதியும் வளைந்தது
பேசிடுந் தமிழ்மொழி யுரிமையு மிழந்தது
அருந்துணை யிழந்ததால் மங்கைய ரழுதனர்
அத்தனை யிழந்ததாற் புத்திர ரழுதனர்
தருந்தனம் போலருந் தனயரை யிழந்த
தாய்க்குலங் கைகளைத் தலைசுமந் தழுதது
அருந்துயில் தானோ நல்லையின் முருகா
அஞ்சலென் றெழுந்தெமை யாட்கொள்ளு வாயே!

★ ★ ★

வீதிகள் தோறுந் தமிழ்ப்பிணம் நிறைந்தது
வீடுகள் தோறும் அழுமொலி யெழுந்தது
காதிகள் படைக்கலங் கைகளி லேந்திக்
காளையர் தங்களைத் தேடியே வந்தார்
நீதியின் வடிவமாய் நல்லையம் பதியில்
நின்றநம் முருகா வந்துனை யடைந்தோம்
ஆதிப ரைமடி தவழ்வடி வேலா
அஞ்சலென் றெழுந்தெமை யாட்கொள்ளு வாயே!

★ ★ ★

காவற்ப டையினர் காளையர் தம்மைக்
கரவில்வி சாரணைக் கெனக்கொடு செல்வார்
மேவிடு மவருயிர் போக்கியு டல்களை
வெளிகளில் வீதியிற் போட்டிராச் செல்வார்
ஆவிக்குங் காவல் ஈங்கிலை முருகா
அதற்கொரு நீதிவி சாரணை யில்லை
தேவருந் தொழுவரும் நல்லையம் பதிசேர்
தெய்வமே யெழுந்தெமை யாண்டரு ளாயே!

★ ★ ★

செந்தமிழ் பயில்வார் பல்கலைக் கழகம்
செல்வதைத் தடுக்க வினைபுரி கின்றார்
பைந்தமிழ் மண்ணிற் பலர்குடி யேறிப்
பலங்குறைத் தெங்கள் பதிபிடிக் கின்றார்
எந்தையே யெங்கள் துயர்களைந் தாள்வோர்
இப்புவி மீதினில் யாவரே யுள்ளார்
வந்துனை யடைந்தோம் நல்லையில் மருவும்
மந்திர வடிவே யெழுந்தரு ளாயே!

''குகன்''

---

# உலகக் கிண்ணப் போட்டியில்

# ஆர்ஜன்ரீனாவுக்கு வெற்றி தந்த

# உதைபந்தாட்ட வீரர் மரடோனா

1986ஆம் ஆண்டு உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் போது பிரபல்யமான ஒரு வீரர்தான் டியகோ மரடோனா.

கடைசியாக நடைபெற்ற உலக கிண்ணப் போட்டியில் ஆர்ஜன்ரீனா உலக கிண்ணத்தை வெல்லக் காரணமாக இருந்தவரும் அவரே. இவரின் சிறப்பான ஆட்டம் இங்கிலாந்துக்கும் ஆர்ஜன்ரீனாவுக்கும் இடையிலான ஆட்டத்திலேயே வெளிப்பட்டது.

இங்கிலாந்தும், ஆர்ஜன்ரீனாவும் போக்லாந்து யுத்தக் களத்தில் சந்தித்தபின்பு ஒன்றையொன்று எதிர்கொண்டது கடந்த உலக கிண்ணத்திற்கான விளையாட்டுக் களத்தில்தான்.

அரை இறுதிப்போட்டியில் இரண்டு நாடுகளும் மோதியபோது அவை வெற்றியடைவதை ஒரு மானப்பிரச்சினையாகவே கருதின. இப்போட்டியில் ரசிகர்களும் தங்களுக்குள் மோதிக் கொண்டது இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மரடோனா பந்தை ஆடுகளத்தில் மையப் பகுதியில் இருந்து தனியே கொண்டு சென்று தலையினால் இடித்தாராஅன்றி கையினால் கோல்கம்பங்களுக்கு இடையில் தள்ளினாரா என்ற சர்ச்சையை ஏற்படுத்தும்வகையில் ஒரு கோலைப்போட்டு ஆர்ஜன்ரீனாவுக்கு ஒரு அபார வெற்றியைத் தேடிக் கொடுத்தார்.

தற்போதுள்ள உதைபந்தாட்ட வீரர்களில் முன்னணியில் திகழும் இவர்மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை காரணமாக அடுத்தவாரம் வெம்பிளியில் நடைபெறவுள்ள ஆட்டமொன்றில் ஆடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. வெம்பிளியில் நடைபெறும்

## விளையாட்டு விமர்சனம்

இவ்வாட்டத்தில் ஆங்கில லீக் குழுவும் உலக தெரிவுக் குழுவும் ஆடவுள்ளன. இந்தப் போட்டி ஆங்கில லீக்கின் நூறாவது ஆண்டுப்பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படுகிறது.

ஆனால் கடைசிநேரத்தில் மரடோனாவுக்கு இந்த ஆட்டத்தில் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனால் சென்ற முறை இங்கிலாந்தை மண்கவ்வச் செய்த மரடோனா இம்முறையும் இங்கிலாந்து வீக் குழுவுக்குத் தலையிடியைக் கொடுக்கவுள்ளார். இங்கிலாந்து ரசிகர்களும் மரடோனாவின் அருமையான ஆட்டத்தை அவர்கள் மண்ணிலேயே காணச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ★

★

**கிரிக்கெட்**

உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட்போட்டியில் கலந்து கொள்ளும் இலங்கை கோஷ்டியின் தெரிவுக்குழு இவ்வாரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் குழுவின் தலைவராக இம்முறையும் டுலிப் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நடைபெற்ற உலக கிண்ணப் போட்டிகள் [illegible] ஆடச் சென்ற [illegible] முறையாவது இலங்கைக்குக் கைகொடுக்குமா என்பது போட்டிகளின் முடிவின் போது தெரிய வரும்.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் இலங்கையின் தெரிவுக் குழுவில் தமிழர் ஒருவரும் இடம் பெறுகிறார். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மகாராஜா ஸ்தாபன அணிக்கும், என். சி. சி அணிக்கும் திறமையாக ஆடி வரும் இவருக்கு இச் சந்தர்ப்பம் கிடைத்தது இவரது திறமைக்குக் கிடைத்த வெகுமதியே.

இவர் இறுதியாகத் தெரிவு செய்யப்படும் [illegible] வாரா என்பது இன்னும் [illegible]. இவரின் தெரிவு அவரது திறமைக்குக் கிடைத்த வெகுமதியா அல்லது இலங்கையில் தற்போது தமிழர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது என்பதை இந்தியாவுக்குக் காட்ட நடத்தப்படும் தாஜா விளையாட்டா என்பது தெரியவில்லை.

**பாக் இங்கிலாந்து இறுதி டெஸ்ட்**

இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ஐந்தாவது டெஸ்ட்போட்டி

- ஈசன் -

லோடஸ் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் போட்டி பல



வகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தப் போட்டியைப் பாகிஸ்தான் வென்றாலோ அல்லது வெற்றி தோல்வி இன்றி முடித்தாலோ தொடர் பாகிஸ்தான் பக்கம் சாரும். இங்கிலாந்து வென்றால் தொடர் சமநிலையை அடைய இங்கிலாந்தின் மானம் ஓரளவு காப்பாற்றப்படும். இங்கிலாந்து வெற்றிக்காகப் பாடுபட்டாலும் பாகிஸ்தான் வழமையான பாணியில் ''டிராவை'' நோக்கியே ஆடலாம்.

இந்த போட்டியில் இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் உலகப் புகழ்பெற்ற ஆட்டக்காரர்கள் மூவர் இந்தப் போட்டியுடன் தாம் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ளமையே.

உலகப் புகழ்பெற்ற முன்னணியில் உள்ள சகல துறை ஆட்டக்காரர்களான இயன் பொத்தம், இம்ரான் கான் ஆகியோரும் சிறந்த துடுப்பாட்ட வீரரும் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவருமான டேவிட் கவர் ஆகியோரே இவ்வாறு அறிவித்தவர்களாவார்கள்.

இவர்களின் கடைசி டெஸ்ட்போட்டி இதுவாக இருப்பினும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள உலக கிண்ணப் போட்டியில் இவர்கள் ஆடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சிக்கனம்

எந்தப் பொருளையும் வீணாக்க, சாந்தியடிகளுக்கு மனம் வராது. தமக்கு வரும் கடிதங்களின் மேலுறைகளை எடுக்க வைத்துக்கொள்வார். அவற்றைப் பிரித்து உட்புறம் எழுதாமல் இருக்கும் இடத்தில் குறிப்புகள் எழுதி நண்பர்களுக்கு அனுப்புவார்.

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஓர் அப்பியாசக் கொப்பியை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

– மில்க்வைற் யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

08 - 08 - 1987 சனிக்கிழமை

### எங்கள் வேண்டுகோள்

இது எங்கள் வேண்டுகோளும் விண்ணப்பமுமாகும். நீங்கள் யோகாசனங்கள் செய்ய வேண்டும். உங்களுக்காக நல்லை ஆதீனத்தில் ஆசன நிபுணர் பயிற்சி அளிக்கிறார்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை அனுப்பி யோகாசனப் புத்தகம், விளக்கப் படம் சூரிய நமஸ்காரப்படம் இன்னும்பல அறிவு நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- மில்க்வைற் யாழ்ப்பாணம்

# இரண்டாவது சைப்பிரஸாக இலங்கை உருவெடுக்குமா?

## நிர்ணயிக்கும் பொறுப்பு சிங்கள எம். பிக்களிடம்!

ஒப்பந்தம் கைச்சாத்தானது; தென் இலங்கையே தீப்பந்தமானது.

இப்போது சாம்பர் புகைந்து கொண்டிருக்கின்றது. மீண்டும் எப்போது தீச்சுவாலை விட்டெரியும் என்பது தெரியவில்லை.

பத்திரிகைத் தணிக்கை என்ற தண்ணீரை ஊற்றி தீச்சுவாலை மீண்டும் எழும்பாமல் பார்த்துக் கொள்ளலாம் என்பது அரச வட்டாரங்களின் எண்ணம் போலும்.

இருநாடுகளின் ஒப்பந்தம் 'தனிநாடு' போராட்டத்தை 'சப்' என்று நிறுத்திவிட்டது.

ஒப்பந்தங்களை இதுகாலவரை நிறைவேற்றாமல் பார்த்துக்கொண்டவரே, இலங்கையின் சார்பில் முதல் முறையாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் இது.

இதுகாலவரை நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்கள் இந்த நாட்டில் வாழும் இரண்டு இனங்களின் தலைவர்களினால் செய்துகொள்ளப்பட்டவை.

இப்போது தான் முதன்முறையாக உள்நாட்டுப் பிரச்சினை குறித்து இரண்டு நாடுகளின் தலைவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர்.

உள்நாட்டுப் பிரச்சினை, பிராந்தியப் பிரச்சினையாக வளர்க்கப்பட்டதன் பலன் இது. பெரிய நாடு ஒன்றின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியதாயிற்று.

காரணம் என்ன?

### வினையும் பலனும்

சிறிய இனத்தின்மீது மேலாதிக்கம் செலுத்தப் பெரிய இனம் விடாப்பிடியாக நின்றதால் வந்த வினை அல்லவா இது!

பலன்?

சிறிய இனத்தின் நலன்கள், அபிலாஷைகளை மட்டும் பூர்த்தி செய்வதுடன் நின்றுவிடாது—

பெரியநாட்டின் நலன், அபிலாஷைகளையும் பூர்த்திசெய்யும் நிர்ப்பந்தம் பெரிய இனத்துக்கு ஏற்பட்டு விட்டது.

பேரினவாதத்துக்குப் பணிய மறுத்து 'தனிநாடு' கோரிப் போராடிய சிறிய இனமும் அந்த போராட்டத்தைத் 'தொப்' என்று விட வேண்டியதாயிற்று.

இதில் இருந்து தெரிவது என்ன?

அருகில் இருக்கும் பெரிய நாட்டின் மேலாதிக்க வல்லமை.

அந்த வல்லமைக்கு உட்பட்டு ஒப்பந்தம் ஒன்றை சிறிய நாடும் பெரியநாடும் கைச்சாத்திட்டாயிற்று.

'தனி நாடு' கோரிய தமிழினமும் ஒப்பந்தத்துக்கு விரும்பியோ விரும்பாமலோ உடன்பட வேண்டியதாயிற்று.

இனிச் செய்யவேண்டியது என்ன?

இரண்டு நாடுகளின் தலைவர்கள் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை இந்த நாட்டின் மன்னர்கள் (அரசு. எம்.பிக்கள்) ஏற்றுக்கொள்வார்களா?

இதுதான் இன்று எழுந்துள்ள கேள்வி.

கேள்விக்கு விடை காண நாடாளுமன்றம் கூடவேண்டும்.

அதற்கு முதல் மக்களின் ஆதரவை தர்மிஷ்டர் திரட்ட வேண்டும்.

நேற்றுவரை (அதாவது ஒப்பந்தம் உருவாவதற்கு முதல் நாள் வரை) தென் இலங்கை முழுவதும் ஆள் மாறி, மாறி மகாஜன சம்பத, மகாபொல, செவன என்றெல்லாம் விழாக்களை நடத்தி மக்களைச் சந்தித்து வந்த அரசுத் தலைவர்கள், இன்று வெளியே செல்ல முடியாத நிலையில் உள்ளனர்

ஒப்பந்தம் பற்றி வானொலியிலும் ரூபவாஹினியிலும் தோன்றி மக்களுக்கு விளக்கம் கொடுக்கின்றனர்.

தான் கையொப்பம் வைத்த ஒப்பந்தம் குறித்து தனது அமைச்சர்களிடமிருந்து எழுத்து மூலமான ஆலோசனையை ஜனாதிபதி கோரி இருக்கின்றார்.

ஒரு வாரத்துக்குஇடையில் அமைச்சர்கள் தங்கள் ஆலோசனையைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இந்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் அடுத்த 18ஆம் திகதி தாக்கல் செய்யப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்திகதியில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று இன்னொரு தகவல் கூறுகின்றது.

### உள்ளும் புறமும்

### அரசமைப்பு திருத்தம்

ஒப்பந்தத்தின்படி அரசமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டியுள்ளது.

அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படுகின்றது.

குறைந்தது 112 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தால் தான் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியும்.

அப்போது தான் ஒப்பந்தம் சட்டபூர்வமாக அமுலுக்கு வரும்.

ஒப்பந்தத்தை அரசு எம். பிக்களில் 35க்குஅதிகமானோர் எதிர்ப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

கைச்சாத்தான போது தென்இலங்கையில் ஏற்பட்ட 'சூடு' போல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது இன்னொரு 'சூடு' உருவாகக் கூடும்.

இது கொழும்பு அரசியல் அவதானிகளின் கருத்து.

அதை இந்நாட்டு மன்னர்கள் தாங்கிக் கொள்வார்களா?

ஊரடங்கைப் போட்டு கையெழுத்திட்டது போன்று, நாடாளுமன்றத்திலும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியுமா?

மக்கள் எதிர்ப்பு அதிகரிப்பினும் மக்கள் பிரதிநிதிகள் துணிந்து நாடாளுமன்றம் சென்று ஆதரித்து வாக்களிக்க முடியுமா?

இப்படி எல்லாம் கொழும்பு வட்டாரங்களில் கேட்கப்படுகின்றது.

### திருமலையிலேயே எதிர்ப்பு

இதன் மத்தியில் திருகோணமலையில் இருந்து ஒரு செய்தி கிடைத்துள்ளது.

வடக்கு-கிழக்குஇணைப்பின் நடுநாயகமாக விளங்கப்போவது திருகோணமலை.

அந்த மாவட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஒப்பந்தத்தை எதிர்க்கின்றார்கள்.

சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர். குண்டுகளை வெடிக்க வைத்துள்ளனர்.

அதற்கு மேலாக ஒப்பந்தத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இரண்டு யு என். பி. எம்பிக்களையும் (ஜனாப். மஹ்ரூப் - மூதூர், திரு லீலரத்ன—சேருவில) ஊர்வலமாக நேரிற் சென்று வற்புறுத்தும் ஏற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனராம்.

இந்த நிலையில் இந்திய—இலங்கை ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதே பகீரதப் பிரயத்தனமாக இருக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

அப்படி ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடுவேன் என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

### வாய்ப்பு இருக்குமா?

விகிதாசார வாக்களிப்புத் திட்டத்தின்கீழ் புதிய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பதவிவரக்கூடிய வாய்ப்பு அரசியல் கட்சி எதற்கும் கிடைக்குமா? என்பதே சந்தேகமாக உள்ளது.

இந்த நிலையில் 'வெல்ல முடியாத யுத்தம்' போல் 'நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்கள்' வரிசையில் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் சேர்ந்து கொண்டால்..

(இப்படி எண்ணக் கூடாது என்று சிலர் கூறிக்கொண்டாலும் நாட்டு நடப்புக்கள் அப்படி எண்ணத் தூண்டுகின்றனவே)

ஆகவே இது நிறைவேற்றப்படாத ஒப்பந்தம் ஆகிவிட்டால் என்ன நிலை?

### இரண்டாவது சைப்பிரஸ் ஆகுமா?

'இரண்டாவது சைப்பிரஸ்' ஆக இலங்கை மாறுவதற்கு முன்னர் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் இது — இப்படி மேற்கு ஜேர்மன் பத்திரிகை ஒன்று கூறுகின்றது.

சைப்பிரஸின் இன்றைய நிலை எப்படி உள்ளது என்பதைப் பார்ப்போம்.

மத்தியதரைக் கடலில் உள்ள தீவு, சைப்பிரஸ். 3,600 சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது. மக்கள் எண்ணிக்கை 7 லட்சம் இருக்கும் கிரேக்கர்களும் துருக்கியர்களும் அங்கு வாழ்கின்றனர்.

பெரும்பான்மை கிரேக்கர்கள் துருக்கி இனத்தவர்களைப் புறக்கணித்துவந்தனர்.

இதனால் இலங்கை போன்று அங்கும் இன மோதல் உருவாகியது.

துருக்கியர் முழுச் சமஷ்டி அரசமைப்பைக் கோரினர். கிரேக்க பெரும்பான்மை ஆட்சி அதற்கு இணங்கவில்லை. ஐ. நா.வுக்கு இது விஷயம் முறையிடப்பட்டது.

சைப்பிரஸ் பிரச்சினையைத் தீர்க்க ஐ. நா. எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் சைப்பிரஸில் துருக்கி இன மக்கள் வாழும் பகுதிக்குள் அருகில் இருந்த துருக்கி நாட்டுப் படைகள் புகுந்தன.

1974 இல் சைப்பிரஸுக்குள் புகுந்த துருக்கி நாட்டுப் படைகள் துருக்கி மக்களை பாதுகாத்து வருகின்றன.

ஐ. நா. தீர்வு காணாத நிலையில் சைப்பிரஸின் துருக்கி மக்கள் தங்கள் பகுதிகளில் தனி நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர் — துருக்கி நாட்டுப் படைகளின் துணையுடன்.

''இந்திய — இலங்கை ஒப்பந்தம் முறிவடைந்தால் இந்த நிலைதான் இலங்கைக்கு ஏற்படும்'' இப்படி மேற்கு ஜேர்மன் நாளிதழ் 'த ஜெனரல் அன்ஸீஜர்'' தலையங்கம் எழுதியுள்ளது.

இது உண்மையாகுமா? அல்லது பொய்த்துவிடுமா? பெரும்பான்மை இன எம்.பி.க்கள் தான் நாடாளுமன்றத்தில் இக்கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டும்.

★

## போட்டோ ஸ்ரற் பிரதி செய்தல்

எம்மால் புதிதாக தருவிக்கப்பட்ட நவீனகம்பியூட்டர் கனன் NP-271 (CANNON NP-271 Computerized) மூலம் திருப்தியான, தரமான போட்டோ ஸ்ரற் பிரதி செய்து தரப்படும்.

சிறந்த போட்டோ ஸ்ரற் பிரதிக்கு

★ ஞானம்ஸ் ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு

★ உதயன் நடத்தும் ★

"அதிர்ஷ்டப் பயணம்"

✱✱✱ விவரம் நாளைய உதயனில் ✱✱✱

## மீண்டும் பஸ்சேவை ஆரம்பம்

மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எதிர்வரும் 10-08 87 முதல் மட்டக்களப்பு—கல்முனை சேவை ஆரம்பமாகிறது. புறப்படும் நேரம் காலை 5.15 மணி.

DK TRAVELS

★ ஆசனம் பதிவு செய்யும் இடம் ★

R. B. BOOKING CENTRE,
MODEL MARKET,
JAFFNA. (758)

உ

## வடகோவை கண்ணகை அம்பாள் ::தேர்த் திருவிழா::

இன்று (08-08-87) தேரேறிவரும் கண்ணகி அம்பாள் நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பாராக.

உங்கள் ஒளி அமைப்பு தேவைகட்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

மனோலைற்

சாந்தி றேடஸ்,
கோப்பாய்.

என். இரத்தினம்
உதயன் முகவர்,
கோப்பாய்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.

1. இயந்திர இயக்குனர்:
ஹைடில்பேர்க் இயந்திரம் இயக்குவதில் மூன்று வருட முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்,

2. அச்சுக்கோப்பாளர்கள்:
உரிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.

தபாற்பெட்டி இல: 100
மே/பா உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
27 - 3 - 1922

மறைவு :
23 - 7 - 1983

திதி :
8 - 8 - 1987

திருமதி பொன்னுத்துரை நாகம்மா

அன்புடன் நினைவு கூரும் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

497, கே. கே. எஸ். றோட்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம். (1454)

## முதலாண்டு நினைவஞ்சலி



கபிரியற்பிள்ளை சேவியர் ஜெகராஜா
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

மலர்வு: 16 - 03 - 1923
உதிர்வு: 08 - 08 - 1986

கடல் கடந்த சீமையில் வாழ்ந்திட்ட நான்
உன்கதி கேட்டு அடியற்ற மரம்போல் வீழ்ந்தேன்
மாமா என்று ஓடிவர, ஏன் மாமா
எங்களை விட்டு ஓடிவிட்டீர்
அம்மப்பா உனக்குமுத்தம்தரஓடிவந்தேனே
கட்டிலில் உனை வைத்து சாத்தமைந்தார் கதறியழ
காலனிடம் கணை தொடுக்க சென்றீரோ?

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
(759)

## முதலாண்டு நினைவஞ்சலி



தெ. சத்தீஸ்வரராசா

மலர்வு: 20 - 10 - 1964
உதிர்வு: 18 - 08 - 1986

திதி: 08 - 08 - 87

வாழ்வின் தலைவாசலுக்கு வந்துவிட்ட நீ, வசந்தத்தை மட்டும் காணாமல் போனது ஏனோ?

சத்தியா!

நீ பிரிந்து ஓராண்டு சென்று விட்டது. ஆனால் உன் நினைவு எம் வாழ்வு உள்ளளவும் வாழும்.

உன்பிரிவால் வாடும்
தாய், தந்தை, சகோதரர்,
சகோதரி, மைத்துனி
மைத்துனர், மகள், மருமகள்
உறவினர், நண்பர்கள்
துன்னாலை தெற்கு. (1463)

★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 08-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Saturday August 08, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org